விலை சதம் 5

பக்கங்கள் 6

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லேம்

புதுதகம 1 | கொழும்பு, சாவஷ்தக வரு ஐப்பசி 20உ வியாழக்கிழமை | Colombo, November 6 1947 | ஹிஜ்ரி 1366 துல்ஹஜ் பிறை 22 | இதழ் 156

இந்தியா

ஸ்ரீநகரின் 10வது மைலில் எதிரிகள் விரட்டப்பட்டனர்

ஷேக் அப்துல்லாவுடன் படேல், பலதேவ்சிங் ஆலோசனை

லாகூரில் பாகிஸ்தான் மந்திரி சபைக் கூட்டம்

புதுடில்லி, நவ. 4

இந்திய சர்க்கார் பாதுகாப்பு மந்திரி காரியாலய அறிக்கை தெரிவிப்பதாவது:- காஷ்மீரத்தின் தலைநகரான ஸ்ரீநகருக்கு தென்மேற்கே 10 மைல் தூரத்தில் படையெடுத்து வந்த மலைஜாதியினரை இந்திய துருப்புகள் பலத்த சேதம் விளைவித்து முறியடித்தனர். மலைஜாதியினரும் கொள்ளைக் கூட்டத்தாரும் ஸ்ரீநகரை யடுத்த பள்ளத்தாக்கில் கிராமவாசிகளை பயமுறுத்தி பயங்கரச் செயல்கள் புரிகின்றனர். இந்திய ராணுவ விமானங்கள் அவர்களை வரட்டுகின்றன. நேற்றிரவு பட்காம் கிராமத்தில் 700 எதிரிகளுடன் இந்திய துருப்புகள் போராடி அவர்களில் பாதிப்பேர்களை அழித்தன. எதிரிகள் ஒளிந்து மறைந்தும் மாறுவேடத்தில் வந்தும் தொந்தரவுகொடுப்பதால் காஷ்மீர் போராட்டம் கண்ணாம்பூத்தி விளையாட்டுமாதிரியருக்கிறது. ஸ்ரீநகருக்கு இந்தியதுருப்புகள் விமானங்களில் வந்து இறங்கிகொண்டிருக்கின்றன.

சமஸ்தான மந்திரி சர்தார் படேலும், பாதுகாப்பு மந்திரி பலதேவசிங்கும் விமானத்தில் ஸ்ரீநகர் சென்று திரும்பினார்கள். அவர்கள் ஸ்ரீநகரில் காஷ்மீர் பிரதம மந்திரி ஷேக் அப்துல்லாவைச் சந்தித்துப் பேசிவிட்டு திரும்பினார்கள்.

ஜனாப் ஜின்னாவும் பாகிஸ்தான் பிரதமரும் மற்ற பாகிஸ்தான் மந்திரிகளும் லாகூரில் கூடி காஷ்மீர் நிலைபற்றி ஆலோசனை நடத்தினார்கள்.

லாகூரில் பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான் ரேடியோவில் பேசியபோது இந்திய சர்க்கார் காஷ்மீர் முஸ்லிம்களை நிர்மூலமாக்குவதாகக் குற்றஞ்சாட்டினார். இந்திய சர்க்கார் அதற்கு விடுத்த பதிலில் பாகிஸ்தான் அனுமதியின்றி மலைஜாதியினர் பாகிஸ்தான் பிரதேசத்தைக் கடந்து எவ்விதம் படையெடுத்து வந்தார்கள் என்று கேட்டு பாகிஸ்தான் மீது குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள்.

காஷ்மீருக்குச் செல்ல வழி விட முடியாதென்று வடமேற்கு எல்லைப்புற மாகாண கவர்னர் கன்னிங்ஹாம் மொகமந்து மலைஜாதியினருக்கு தெரிவித்தாராம்.

எல்லா இடங்களிலும் தங்களுக்கு வெற்றி கிடைப்பதாக காஷ்மீர் போட்டி சர்க்கார் அறிவிக்கின்றனர்.

லண்டன் 'டைம்ஸ்' கருத்து

லண்டன், நவ. 5

லண்டன் டைம்ஸ்பத்திரிகை எழுதுவதாவது:- கத்தியவார், காஷ்மீர் சமஸ்தானங்களை முன்னிட்டு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமுள்ள தகராறில் டலாக்காரம் முற்றிவிடின் இந்நாடுகளுக்கும் அது அழிவையுண்டாக்கும். பாகிஸ்தான் சர்க்கார் பலாத்கார முறையில் பிரசாரத்தில் இறங்கியிருப்பது தவறு. இரு நாடுகளுக்கிடையே விரைவில் சமரசமேற்படுவதே மேலானது.

ஹைதராபாத் கமிஷனர் பிரசங்கம்

பாகிஸ்தான் ஹைதராபாத் கமிஷனர் திருரஹிமத்துல்லா இன்று கிழக்கந்திய சங்கத்தில் பாகிஸ்தானைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்தார். கூட்டத்திற்கு லார்டு பெத்திக் லாரன்ஸ் தலைமை வகித்தார்.

பாகிஸ்தான் ஸ்தானிகர்

டெஹ்ரான், நவ. 4

சென்ற 5 வருட காலமாக இந்திய வர்த்தக கமிஷனராக இங்கு இருந்து வந்த பேஜர் சையது முகம்மது ஹஸன் பாரசீகத்தில் பாகிஸ்தான் ஹைதராபாத் கமிஷனராக நியமிக்கப்படிருக்கிறார்.

"முஸ்லிம் லீக் சட்ட விரோதம்"

பாமிங்ஹாம், நவ 4

டாக்டர் திவான் சிங் தலைமையில் இங்கு நிறுவப்பட்டுள்ள ஐக்கிய இந்திய சங்கத்தார் இந்திய யூனியனிலுள்ள முஸ்லிம் லீகை சட்டவிரோதமான ஸ்தாபனமாக்க வேண்டுமென்று கோருகின்றனர். இது சம்பந்தமாக இந்திய யூனியனுக்கு அவர்கள் ஒரு வேண்டுகோள் அனுப்பியிருக்கின்றனர்.

இந்திய ராணுவ தூதுகோஷ்டி

லண்டன், நவ. 4

இந்திய ராணுவத்திற்கு உதவியாக சில பிரிட்டிஷ் அதிகாரிகளை பதவியில் நீடித்து வைத்திருப்பதுபற்றி பிரிட்டிஷ் சர்க்காருடன் கலந்து பேசுவதற்காக இங்கு இன்று இந்திய ராணுவ தூது கோஷ்டி வந்தது. பாதுகாப்பு இலாகா காரியதரிசி திரு. எல் எப் படேல் தலைமையில் இந்தியா தளபதி ஸர். ராய் லோக்காண்டும், திரு. ஏ. கே சாண்ட்லாப் வந்திருக்கிறார்கள். இவர்கள் இங்கு 10 தினங்கள் தங்கியிருப்பார்கள்.

பாகிஸ்தான் தளபதி ஸர் பிராங்க் மெசரி சில தினங்களாக இங்கு இருக்கிறார்.

கூர்க்க துருப்புகள்

புதுடில்லி, நவ 4

கூர்க்க துருப்புகளை இந்தியாவும் விரும்புகிறது. பிரிட்டனும் விரும்புகிறது. இது சம்பந்தமாக நேபால் சர்க்காருடன் இந்திய சர்க்காரும் பிரிட்டிஷ் சர்க்காரும் பேசி முடிவு செய்திருந்தனர். மற்றுமுள்ள விபரங்களை முடிவுசெய்ய பிரிட்டிஷ் தூதுக் கோஷ்டியொன்றும் இந்திய தூதுக் கோஷ்டியொன்றும் நேபாளத்திற்குப் புறப்பட்டுப் போயிருக்கின்றன.

உலக வர்த்தக சாசனமும் இந்தியாவும்

பம்பாய், நவ. 4

ஜினிவாவில் முடிவுசெய்யப்பட்ட உலக வர்த்தக சாசனம் பற்றி ஆராய அகில இந்திய சர்க்கார் வர்த்தக காரியதரிசி என் ராகவன் பிள்ளைதலைமையி பொருளாதார ஆலோசகர் கமிட்டி, வர்த்தகக் கொள்கை கமிட்டி ஆகிய இரு கமிட்டிகளின கூட்டம் நடைபெற்றது. கைத்தொழில் முன்னேற்றமிலாத நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தியின் பொருட்டு அவைகளின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க தினச் சம்பள தொழிலாளர் கதி என்ன?

அவர்களுக்கும் நீதி வழங்குக!

பிரதமருக்கு திரு. பீட்டர் கெனமன் வேண்டுகோள்

கொழும்பு, நவ 5

கடந்த வேலை நிறுத்தத்தின் காரணமாக வேலையில இருந்து நீக்கப்பட்ட அரசாங்க தினச் சம்பள தொழிலாளர் சம்பந்தமாக கீழ்க்கண்ட கடிதத்தை இலங்கைக் கமியூனிஸ்ட் கட்சிக் காரியதரிசியும் கொழும்பு மத்திய பகுதி பாராளுமன்ற அங்கத்தினருமான திரு. பீட்டர் கெனமன் பிரதமருக்கு அனுப்பியுள்ளார்:-

மே, ஜூன் மாதங்களில் நடைபெற்ற வேலை நிறுத்த சம்பவங்களின் காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட அரசாங்க குமாஸ்தாக்களை திரும்பவும் வேலையில் அமர்த்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது இவ் வேளையில் இதே விதமான நடவடிக்கையை மந்திரி சபை வேலை நீக்கம் செய்யப்பட்ட அரசாங்கத் தினச் சம்பளத் தொழிலாளர் சம்பந்தமாகவும் அமுல் நடத்த வேண்டும் என்று வற்புறுத்தவே இதனை எழுதுகின்றேன்.

அரசாங்கம் தனது ஊழியர்களின் ஒரு பகுதியார் சம்பந்தமாக ஓர் நடவடிக்கை எடுக்கும்போது, அதே நிலையில் உள்ள இதர பகுதியினருக்கும் அதே விதம் நடவடிக்கையை எடுப்பதுதானே முறை. அங்ஙனம் செய்தால்தான் அரசாங்கம் தனது ஊழியர்களிடம் பட்சபாதம் காட்டுகிறது என்ற எண்ணம் தோன்றுவதைத் தவிர்க்க முடியும். இந்த விஷயம் சம்பந்தமாக மிகுந்த சிரத்தை எடுக்க வேண்டும் என்று மந்திரி சபையிடம் நான் கோருகிறேன்.

கள்ளமார்க்கெட்டில் ஜவுளி

பாடசாலைக் கூப்பன்கள் உதவியளிக்கின்றதாம்

கொழும்பு, நவ. 5

எல்லா ஜவுளிகளுக்கும் பாடசாலைக் கூப்பன்களைச் செல்லுபடியாக்கியதால் ஜவுளி வர்த்தகத்தில ஈடுபட்டுள்ளவர்களுக்கு கள்ள மார்க்கெட்டுக்கு இது உதவியளிப்பதாகக் கூறப்படுகிறது. பாடசாலைக் கூப்பன்களைக்கொண்டு அதற்குள் கட்டுப்படுத்தப்படாத மற்ற ஜவுளிகளையும் வாங்கலாம். இதனைக் கொண்டு வர்த்தகர்கள் சாதாரண ஜவுளி வகைகளுக்கும பாடசாலைக் கூப்பன்களையே வேண்டுமென்று கூறி வாங்கிக் கொண்டு பாடசாலை ஜவுளிக் கூப்பன்களுக்கு விற்கும் துணிகளை கள்ள மார்க்கெட்டுகளில விற்றுவிடுகின்றனர் என்று கூறப்படுகிறது.

யாழ்ப்பாண கிராமக் கமிட்டி தலைவர்கள் சங்கம்

மந்திரி தலைமையில் மகாநாடு

யாழ்ப்பாணம், நவ 5

கிராமக் கமிட்டிகள் தலைவர்கள் சங்கத்தின் மகாநாடு ஒன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-15 மணிக்கு ஸ்தல ஸ்தாபன சுகாதார மந்திரி திரு எஸ். டபிள்யூ ஆர் டி. பண்டாரநாயக்கா தலைமையில் ஆரம்பமாயிற்று. இம்மகாநாட்டுக்கு பல பிரமுகர்களும் சமூகமளித்திருந்தனர்.

யாழ்ப்பாண ஜில்லா கிராமக் கமிட்டிகள் சங்கத் தலைவர் முகாந்திரம் திரு ஸி. தியாகராஜா மந்திரியை வரவேற்றுப் பேசுகையில் ஸ்தல அதிகாரிகளால் எடுக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளையும் ஸ்தலஸ்தாபன சர்க்கார் இரு வருட காலத்துள் அடைந்துள்ள முன்னேற்றம்பற்றியும், யாழ்ப்பாண நிலுள்ள ஸ்தலஸ்தாபன சர்க்கார் காரியாலய அதிகாரிகள் புரிந்த வேலைகளைப் பாராட்டியும் கூறினார்.

ஸ்தலஸ்தாபன நிதி என்னும் விஷயம்பற்றி ஸ்தலஸ்தாபன சர்க்கார் உதவி கமிஷனர் திரு. ஸி. சூரிய குமாரன் ஒரு அறிக்கை சமர்ப்பித்தார் அந்த அறிக்கையில், இத்தேசத்தில ஸ்தலஸ்தாபன சர்க்காரின் நிதியின் அடிப்படை, நிதி முறைகள் முதலியனபற்றி கூறப்பட்டதுடன், மரவாயில் ஒரு பகுதியை மானயம் கொடுப்பதில் சில மாற்றங்கள், வர்த்தகம் முதலியனவற்றுக்கு ஊக்கமளித்தல், கடன் கொடுத்து சலுகைகளை தாராள சலுகை மூறைகள். தேசிய ஸ்தலஸ்தாபன அபிவிருத்திக்கு நிலையான திட்டங்கள் வகுப்பது முதலியனபற்றிய சிபார்சுகளும் அடங்கியுள்ளன.

மந்திரி பேசுகையில் மேற்கூறிய அறிக்கையை பாராட்டியதுடன் அந்த அறிக்கையில் காணப்படும் விஷயங்களுக்கு தாம் வருங்காலத்தில் முக்கியத்துவம் கொடுக்கப் போவதாகவும் குறிப்பிட்டார், வடக்கு மாகாண தொகுதி அங்கத்தவர் (பாராளுமன்றம்) திரு கே கனகரத்தனம், சுகாதார ஸ்தலஸ்தாபன மந்திரி, பாராளுமன்ற காரியதரிசி திரு வி. நவரத்னா, நிரந்தரக் காரியதரிசி திரு ஈ டபிள்யூ. கன்னங்கரா முதலியோர் பேசுகையில் திரு சூரிய குமாரனின் அறிக்கையை வெகுவாகப் பாராட்டினர்.

வெள்ளப்பாதுகாப்பு, விதை நெல்லு, கிராமங்களிலுள்ள சிறிய ரஸ்தாக்கள் திருத்தப முதலியவைபற்றி பல தீர்மானங்கள் இம் மகாநாட்டில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

தெல்லிப்பழை கிராமக் கமிட்டி தலைவர், காங்கேசன்துறை சிவில் ஆஸ்பத்திரியை க்ஷயரோக ஆஸ்பத்திரியாக மாற்றப்படாதென்று ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

இது விஷயமாக திரு. பண்டார நாயக்கா குறிப்பிடுகையில், தாம் இப்பிரச்னை சம்பந்தமாக பலருடைய அபிப்பிராயங்களை அறிந்திருப்பதாகவும் அத்தீர்மானத்தை வாக்கெடுப்பதற்குச் சபையில் விடப்படினை சபையினர் எவ்விதம் வாக்களிப்பர் என்பது தமக்குத் தெரியுமென்றும் ஆகையால் இத் தீர்மானம்பற்றி வாக்கு எடுக்க வேண்டியது அவசியமில்லையென்றும் தாம் இப்பிரச்னையை வெகு சிரத்தையுடன் கவனிப்பார் என்றும் கூறினார். இதன் பின் இத்தீர்மானம் எடுக்கப்படவில்லை.

அரசாங்க ஊழியர் மீது குற்றச்சாட்டு

கைவிடுவதற்கு முடிவு

கொழும்பு, நவ. 5

கடந்த வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட அரசாங்க ஊழியர்கள் மீது பல குற்றச்சாட்டுகள் கொண்டுவரப்படலாயின்றனவல்லவா? அவற்றை இப்போது கைவிடுவதாக அரசாங்க சேவை (பப்ளிக் சர்விஸ் கமிஷன் தீர்மானித்துள்ளதாக அறியப்படுகிறது.

இது சம்பந்தமாக டாக்டர் என் எம். பெரேரா 42 பாராளுமன்ற அங்கத்தினர் கை ஒப்பதோடு கூடிய அதிகாரப் பத்திரத்துடன் பிரதமர் சேனநாயக்காவைப் பேட்டி கண்டு, அரசாங்க ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுப்பதை பாராளுமன்றம் இது சம்பந்தமாக விவாதிக்கும்வரை ஒத்திபோட வேண்டுமென்று கேட்டிருந்தார்.

இலங்கை-கியூபா வர்த்தகபேச்சுவார்த்தை

கொழும்பு, நவ. 5

கியூபாவில் இம்மாத முடிவில் நடக்க இருக்கும் முக்கிய வர்த்தக மகாநாட்டுக்கு இலங்கையின் தூதுக்கோஷ்டி தலைவராக திரு ஜி ஸி. என். கொரியா (லண்டனிலுள்ள இலங்கைப் பிரதிநிதி செல்வார். அவருடன் இணைப் பிரதிநிதியாக திரு ஏ மகாதேவாவும் செல்வார். ஒருநேரத்தில் இரு இடங்களில் மகாநாடு நடப்பின் இவர் பிரதிநிதியாக இருந்து கடமையாற்றுவார்.

அரசாங்கக் கட்டிடத்தின் மீது சிங்கக் கொடியேற்றுவிழா!

சிங்கள ராஜ்யத்தையமைக்க கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவர்களின சதிச் செயல் உச்ச நிலையடைகிறது

கொழும்பு, நவ 6

பிரதம மந்திரி திரு. டி. எஸ் சேனநாயக்கா சிங்கக் கொடி அலங்காரக் கொடி என்றார் தொழில் மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி "சிங்கக் கொடியல்லாது வேறு கொடிகள் உயர்த்தப்பட்டால் தன் பட்டாளங்களைக் கொண்டு பிடுங்கி எறிவேன்" என்று சவால் விடுத்தார்.

ஆனால் நேற்று காலையில் மீன் பிடித் தொழில் கைத்தொழில் மந்திரி திரு. ஜார்ஜ் ஈ. டி சில்வா புதிய மீன் பிடி இலாகா ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் கிரஹப் பிரவேச வழா நடாத்துப்பொழுது ஒரு பெரிய சிங்கக் கொடி அக்கட்டிடத்தின் உச்சியில் பறக்க விடப்பட்டிருந்தது.

உலகப் போக்கு, சர்வதேச நிலைமை

ஒவ்வொரு சுதந்திர பிரஜையும் அறியவேண்டும்

பர்மியர்களுக்கு கவர்னர் உபதேசம்

ரங்கூன், நவ. 4

பர்மா கவர்னர் சர் ஹ்யூபர்ட் ராண்ஸ வட பர்மாவில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார் பர்மா யுத்தத்தில் பெரும போர் நடைபெற்ற இடமாகிய பக்கோக்கு நகரில் வரவேற்பிற்குப் பதிலளித்துப் பேசும்போது கவர்னர் பின் வருமாறு தெரிவித்தார்:-

பர்மிய மக்கள் உலக விவகாரங்களை நன்கு அறிந்துகொள்ள வேண்டும். சர்வ தேச விஷயங்களையும், நிலைமைகளையும் அறிய வண்டியது மிகவும் முக்கியமாகும். அடுக்கஜனுவரியில் நீங்கள் பரிபூரண சுதந்திரமடைந்த பொறுப்பு வகிக்கப் போகிறீர்கள். அப்பொழுது நீங்கள் சர்வ தேச சபைகளில் கலந்து உலக விவகாரங்களைப் பற்றி முடிவுகள் செய்ய வேண்டிவரும். ஆதலால் உலகப் போக்கும் உலக அபிப்பிராயமும் எவ்வாறுள்ளனவென்பதை ஒவ்வொரு பர்மிய பிரஜையும் அறிய வேண்டுவது மிகவும் அவசியம்.

எதிர்ப்பு ஒடுக்கப்படும்

லண்டன், நவ. 4

பர்மா சுதந்திர மசோதாவை கன்சர்வேடிவ்கள் எதிர்த்தாலும் மசோதா நிறைவேற்றப்படும்

கொலை வழக்கு விசாரணை

ரங்கூன், நவ. 4

பர்மா மந்திரி கொலை வழக்கு விசாரணையின்போது முதல் எதிரியான மாஜி பிரதமர் ஊ சா தான் குற்றவாளியல்லவென்று வாதாடினார். நீதிபதி அவர் மீதுள்ள குற்றச்சாட்டுகளை வாசித்தார். 15 தினங்கள் விசாரணைக்குப்பின் இக்குற்றச்சாட்டுகள் தொகுக்கப்பட்டன.

எதிரி தரப்பில் ஆஜரான பிரிட்டிஷ் பாரிஸ்டர் வெர்ட்டினஸ இரண்டு வாரம் வழக்கு விசாரணையை ஒத்திவைக்கும்படி மனுச் செய்தார். லண்டனிலிருந்து மற்றொரு வழக்கறிஞரான திரு. டி. கர்ட்டிஸ கே. ஸி வருவாரென்றும் அவருக்கு 2 00 பவுண் அனுப்பியிருக்கிறதென்றும் தெரிவித்தார்.

நவம்பர் 17-ம் தேதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. சர்க்கார் தரப்பு சாட்சிகள் 22 பேர்களை குறுக்கு விசாரணை செய்யப்போவதாக திரு. வெர்ட்டினஸ ஒரு ஜாபிதாவைத் தாக்கல் செய்தார். குற்றச்சாட்டுகள் வாசிக்கப்பட்டபோது 8 எதிரிகளும் தாங்கள் குற்றவாளிகள் அல்லவென்று கூறினர். (ராய்ட்டர்)

தீவுப்பகுதி ஐக்கிய பண்டசாலைகள்

மூன்றாவது வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 5

தீவுப்பகுதி ஐக்கிய பண்டசாலைகள் யூனியன் மூன்றாவது வருடாந்தக் கூட்டம் ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் திரு என். டி. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. தலைவர் பேசுகையில் கூறியதாவது:-

தேசத்தின் அவசர காலத்தில் சங்கக்கடைகள் மூலம் சாமான்கள் வாங்கி விநியோகிக்கும் இயக்கம் பெருந் தொண்டாற்றியுள்ளதை யாரும் மறுக்கமாட்டார்கள். கிராம மக்களுக்கு இந்த இயக்கம் அதிக நன்மையை ஏளித்துள்ளது. ஆதலால் இந்த இயக்கம் இன்று கிராமப் பொருளாதாரத்துறையில் முக்கியத்துவம் வகிக்கின்றது. பொருள் வாங்குபவர் இயக்கம் வெற்றியடைந்தவிடத்தென்பதுடன் மக்கள் திருப்தி படைந்து விடப்படாது. கிராமத்திலுள்ள உற்பத்தி, மார்க்கெட்டில் விற்பனை, சுகாதாரம், கல்வி முதலியவற்றிலும் கூட்டுறவு முறையில் இயக்கங்களை ஏற்படுத்தி தொண்டுகள் புரியவேண்டும். இவற்றினால் கிராமப் பொருளாதாரம் அதிகரிப்பதுடன் கிராமத்தின் செல்வம் கிராமத்திலேயே தங்கி இருக்கும் வேலையில்லாதவர்களுக்கு வேலையும் கிடைக்கும். இந்த நாட்டின் பொருளாதார ஒழுங்குக்கு ஏற்றதாக இலாபமுதலாளித்துவம், சோஷலிஸம் முதலியவற்றுக்கு பதிலாக கிராம வாழ்க்கை அமைப்பைக் கொண்ட கிராமிய இயக்கமே இலங்கைக்கு ஏற்றது. இந்த பாவிலே இயக்முறையைக் காந்தீய பொருளாதார நிபுணர்கள் கையாண்டு வருகின்றனர் இதே முறையே எங்கள் நாட்டுக்கும் ஏற்றது.

இனிமேல் பொருள்கள் வாங்கி உபயோகிக்கும் இயக்கத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எதிரக் கஷ்டங்கள் வரக்கூடும் விலைக் கட்டுப்பாடுகள், மற்றும் கட்டுப்பாடுகள் எல்லாம் நீக்கப்பட்டதும் தனிப்பட்ட வர்த்தகத் துறையினரின் போட்டிகளைச் சமாளிக்க வேண்டியதாக யிருக்கும். இத்தனிப்பட்ட சக்திகளை எதிர்த்துநிற்கக்கூடிய முறையில் நாங்கள் ஒத்துழைக்கவேண்டும். மாகாண ரீதியாகவோ அன்றி இலங்கை முழுமைக்குமோ மத்திய கொள்வனவுஸ்தாபனம் ஒன்றை நாங்கள் அமைத்துக்கொள்ளவேண்டும். கொள்வனவிலேயே பொருள்கள் வாங்கி உபயோகிப்பவர்களின் சங்கக் கடை இயக்கம் அதிகமாக தங்கியிருக்கிறது

கூட்டுறவு இயக்கத்தின் முக்கியத்துவம், தேசத்தின் வருங்கால முன்னேற்றத்திற்கு இவ்வியக்கத்திடமிருந்து எதிர்பார்க்கப்படும் உதவிகள் முதலான காரணமாக புதிய மந்திரி இலாகா அமைக்க நேரிடடுள்ளது. அரசாங்கத்தின் ஆர்வம் கூட்டுறவு இயக்கமுன்னேற்றத்திற்கிருப்பதாக கூறப்பட்டாலும், இந்த இயக்கத்தின் கோரிக்கையை கவனித்து செனெட் சபைக்கு ஒரு பிரதிநிதியை நியமிக்காதது ஏமாற்றத்தையே காட்டுகிறதுள்ளது. மக்களின் இயக்கமான கூட்டுறவு இயக்கத்தின் கோரிக்கை கவனிக்கப்படவில்லை. இந்நிலைமை சரிசெய்யப்படுமென நம்புகிறேன்.

இதன் பின் திரு. ஆர் ஸ்ரீகாந்தா, திரு ஆர். ராஜரத்தினம், திரு. வீரசிங்கம் ஆகியோரும் பேசினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

194 ஏ, தட்டாத் தெரு, கொழும்பு. போன்: 3411.

சர்வதித்து ஆண்டு ரூபா 20 மீ வியாழக்கிழமை

உண்மைச் சுதந்திரம்—6

தமிழர்களின் பொருளாதார நிலைமையை எப்படிக் குறைத்து வந்திருக்கிறார்கள் என்பதை ஒரு சிறிது குறிப்பிட்டோம். தமிழன் இனி கலங்கத் தேவையில்லை. இனி பிறர் கையைப் பார்க்கத் தேவையுமில்லை. தன் நம்பிக்கையையும், தன் முயற்சியையும் கொண்டு அவன் முன்னேறவேண்டும். பிறர் கையில் தன் பலத்தைக் கொடுத்துபிறகு ஏமாந்து நிற்பது பேதமை என்பதைத் தமிழன் உணர வேண்டும்.

"தன் ஆயுதமும்
தன் கைப் பொருளும்,
பிறர் கைக் கொடுக்கும்
பேதையும் பதரே'

என்றார் ஒரு பெரியார். சுயநலங் கருதிய சில தமிழர்கள் தமிழனது கையாயுததைப் பிறர் கைக்கொடுத்து அவர் கட்கு அடிமைப்பட்டு கிடக்கிறார்கள். இம்முறையை தமிழ் மக்கள் வெறுக்கிறார்கள் என்பதைக் காட்டவேண்டும். என்ன செய்யப் போகிறார்கள்.

வேட்டை முடிந்தது என்று சும்மா விருக்கலாகாது. அரசியல் வாழ்க்கையில் மனிதருக்குத் தூக்கம் என்பது இருக்கலாகாது. ஓய்வுஎன்பது இருக்கலாகாது. எப்பொழுதும் கண்ணுங் கருத்துமாய் கவனித்து வாழ வேண்டும். இந்த உணர்ச்சி பொது மக்களிடம் இருக்க வேண்டும். தங்கள் தலைவர்கள்என்றுசொல்லிக்கொண்டிருப்பவர்கள் கவனிப்பார்கள் என்று பொது மக்கள் எண்ணுவது தவறு. தலைவர்களைத் தூண்டவேண்டியது பொது மக்கள் கடமையாகும். தங்களுக்குஅரசியலில் எதிர்ப்புஇருக்கிறது; பெரும்பான்மையோர் எதிர்ப்பிருக்கிறது என்றபயப்படவேண்டாம்.

ஓர் இத்தாலிய மரப்வெட்டி தனது கோடரியில் "வழியிருந்தால் செல்லுவேன்,இல்லாவிடடால் புதுவழி உண்டாக்குவேன் என்ற" எழுத்துக்களைப் பதித்திருந்தானாம். அவனுடைய மனோதிடத்தைக் கண்டீர்களா? காட்டில் மரப் அடர்ந்திருக்கிறதே, உள்ளே நுழைய முடியாது போலிருக்கிறதே என்று அவன் தயங்கி நின்றால் எப்படி அவன் தொழிலைச் செய்ய முடியும்?

அதுபோல் தமிழனும் ஓர் கொள்கையைப் பிடிப்பற்றி நடக்க வேண்டும். கொள்கையும் லட்சியமும் இல்லாமல்செய்யும் காரியங்கள் பலன் பெறா. தமிழன் மற்றமக்களுடன் சண்டையிட்டுப் போட்டியிட்டு யாவருக்கும் உபத்திரவம் தேடவேண்டும் என்ற எண்ணங் கொண்டவனல்ல. தன் சுயமரியாதையையும், தன் நலவுரிமைகளையும் காப்பாற்றிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறான் ஆகவே, மற்ற மக்களுடன் சமத்துவமான முறையில், சுயமரியாதையான முறையில் நடந்து செல்ல வழியிருக்குமானால் அந்த நியாயமான வழியில் நடந்து செல்வான். இல்லாவிட்டால் புதுவழி அவன் தேட வேண்டியதுதானே! "மதியாதார் தலைவாயில் மிதிக்கவேண்டாம்" என்பதற்கிணங்க மதியாதார்களின்றொட்டித்துண்டுகளுக்காகக் காத்திருக்கும்காலம் இனி இல்லை. இருந்தவரை போதும். இனி புது வழிகண்டு பிடித்து தமிழன் தன் நாகரிகம் கலாசாரம் முதலியவற்றைக் காப்பாற்றிக்கொள்ள முன்வருவான் என்ற எதிர்பார்க்கிறோம்.

லிவர்பூல், நவ. 4

230 டன் எடையுள்ள போர்த்துக்கேய கப்பல் நீரில் மூழ்க ஆரம்பித்ததன் காரணமாக தீ வைக்கப்பட்டு அழிக்கப்பட்டது. பிரயாணிகள் எல்லோரும் காப்பாற்றப்பட்டனர். (ராய்ட்டர்)

ஓடும் ரயில் மோதிய வயோதிப பெண்

ஆஸ்பத்திரியில் மரணமானார்

கொழும்பு, நவ 5

ரயில்வே பாதையோரமாக கொழும்பு கிளென்னி வீதியைச் சேர்ந்த மேரி கதனரன் (55 வயது) நடந்து வந்ததாகவும் ரயில் வருவதைக் கண்டு ஓடுபுறமாக ஒதுங்கி நின்றதாகவும் ஆனால் ரயில் எஞ்ஜினின் ஒரு பக்கம் அம்மாதைத் தட்டியதால் அவர் படுகாயமடைந்து ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டாரென்றும் கூறப்படுகிறது. ஆஸ்பத்திரியில் அவர் மரணமானார் விசாரணைநடத்தியதிரு.ஜே.என்னி. திருச்செல்வம் விபத்தினால் நேர்ந்தமரணமெனத்தீர்ப்பளித்தார்

கொழும்பு புதிய பிரதம மாஜிஸ்டிரேட்

கொழும்பு, நவ 5

கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் கர்னல் மெர்வின்ஜோஸப் (யூடிஷல் கமிஷன்) நீதி நிர்வாக கமிஷன் காரியதரிசியாக நியமிக்கப்பட்டுள்ளதால் அவருடைய பதவிக்கு ரத்தினபுரி டிஸ்டிரிக்ட் நீதிபதிதிரு.வி.எச் விஜயரத்தினா நியமிக்கப்பட்டுள்ளார். புதிய பிரதம மாஜிஸ்டிரேட் 17-ம் தேதி பதவி ஏற்பார்.

ரஷியாவிடமிருந்து கோதுமை

பிரிட்டிஷ் மந்திரி மாஸகோ செல்வார்

லண்டன், நவ. 4

பிரிட்டிஷ் வர்த்தக போர்ட் தலைவர் அடுத்த வாரம் மாஸ்கோ செல்வாரென்று எதிர்பார்க்கப்படுகிறது. ரஷியாவுடன் வர்த்தகப் பேச்சு வார்த்தைகள் நடத்துவதே அவரது விஜயத்தின் நோக்கமாகும்.

இப்பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாகவே முடியுமென்று எண்ணப்படுகிறது அதன் பலனாக ரஷியாவிடமிருந்து 60 லட்சம் டன் கோதுமையும், பெருவாரி தானியங்களுக்குரிய மர வகைகளும் பிரிட்டனுக்குக் கிடைக்கலாமென்று தெரிகிறது.

தோட்ட தொழிலாளருப் வெள்ள நிவாரணமும்

காலி, நவ. 5

அகில இலங்கை எஸ்டேட் தொழிலாளர் மகாநாடு ஒன்று திரு பேடராம்டி சில்வா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சமீபத்தில் வெள்ளப் பெருக்கினால் வீடுகளை இழந்தவர்களுக்கும் வீடுகளை சேதமடைந்தவர்களுக்கும் நஷ்டஈடு கொடுக்கவேண்டுமென்றும் ஹோபதொலா, எடோரா லான்ட் எஸ்டேட்டுகளுள்ள உயர்ந்த பிரதேசங்களை ஒதுக்கி மக்கள் குடியிருப்புக்குக்கொடுக்கவேண்டுமென்று அதிகாரிகளை கேட்டுக்கொள்வதற்கு தூதுகோஷ்டியை அனுப்பச் செல்லும்படி தலைவரை தொழிலாளர் கேட்டுக்கொண்டனர்.

மாடிப் படியிலிருந்து விழுந்து மரணம்

கொழும்பு, நவ 5

அநுராதபுரம் என்னுமிடத்தைச் சேர்ந்த டி. பி. சைமன் பீரிஸ் என்பவர் திங்கட்கிழமை புதிதாக கட்டும் வேலை நடந்து கொண்டிருந்த ஒரு மாடிப்படியிலிருந்து தவறி கீழே விழுந்து விட்டதால் மண்டையில்பலத்த காயமடைந்து அதனால் மரணமடைந்தார். விசாரணை நடத்திய அதிகாரி திரு. ஜே என்னி. திருச்செல்வம், தற்செயலாக நேர்ந்த விபத்தினால்மரணமேற்பட்டதாகத் தீர்ப்பளித்தார்.

சர்வகலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர்

கொழும்பு, நவ. 5

இலங்கைச் சர்வகலாசாலையில் தமிழ்ப் பேராசிரியராக இருந்து காலஞ்சென்ற ஸ்ரீமத் விபுலானந்தரின் பின் அவருடைய பதவிக்கு டாக்டர் கே கணபதிப்பிள்ளை நியமிக்கப் பட்டுள்ளார்

தமிழர் ஐக்கியக் கிளர்ச்சி

சீனக் கமியூனிஸ்டுகள் இரகசிய ஸ்தாபனம்

55 பேர் கைது

கிரின் முற்றுகையின் தளர்ச்சி

ஷாங்கை, நவ 4

ஷான்டுங் மாகாணத்தின் பல பாகங்களிலும் பரந்துள்ள சீனக் கமியூனிஸ்டுகளின் இரகசிய ஸ்தாபனம் ஒன்றைப் பற்றிய விரிவான அறிக்கை வியாங்கை ஷேய்க்குக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஸ்தாபனம் கமியூனிஸ்டுகளுக்கு வேண்டியயுதத, உணவுப் பொருட்களைச் சேகரித்துக் கொடுக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறது. ஷாங்கையிலும் இதர இடங்களிலும் இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த 55 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களை விசாரணை செய்வதற்காக தேசிய தற்காப்பு உதவி மந்திரி சின்-டே ஷாங்கை வந்து சேர்ந்துள்ளார்.

சீன அரசாங்கத்தின் ராணுவக் கோட்டையான கிரின் நகரை முற்றுகையிட்டுக்கொண்டிருந்த 20,000 கமியூனிஸ்ட் துருப்புகளும் இப்போ பின்வாங்கி சாங்சுனுக்கு 18 மைல் தொலைவில் சிக்கித் தவிக்கும் தமது இதர படைகளுக்கு உதவிபுரிச் சென்றிருக்கின்றன. (ராய்ட்டர்)

எஜமானரைக்கொன்றவருக்கு 18 வருட சிறை!

அவிசாவளை, நவ. 5

அவிசாவளை டிஸ்டிரிக்டைச் சேர்ந்த கெடஹெட்டாவலுள்ள தோட்டத்தொழிலாளியான திரு. ஏ. விஜயசிங்கா என்பவரை கொலை செய்ததாக அவரது வேலைக்காரரான டபிள்யூ கே முதலிஹாமி (65 வயது) என்பவர் மீது குற்றஞ்சாட்டிக் கொண்டு வரப்பட்ட வழக்கு அவிசாவளை அசைஸ் கோர்ட்டில் நீதிபதி ஆர். ஆர். ஸி. தம்பையா முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது விசாரணையின் முடிவில் எதிரி கைமோசக் கொலை புரிந்ததாக ஒப்புக்கொண்டதன் மேல் நீதிபதி எதிரிக்கு 18 வருட சிறைத் தண்டனை விதித்தார்.

"திருவிதாங்கூரில் தமிழ் மாகாண கோரிக்கை"

காங்கிரஸ் கொள்கைக்கு முரண்பட்டதல்ல

சாமிபார்மடம், நவ 4—

இன்று மாலை சுமார் பதினாயிரம் மக்கள் கொண்ட தி. த. நா. காங்கிரஸ் பொதுக்கூட்டம் ஒன்று ஜனாப் மொய்தீன் பிள்ளை பி ஏ பி எல். தலைமையில் நடைபெற்றது. காலை முதல் ஒலிபெருக்கி அமைக்கப்பட்ட காரில் தி. த. நா. காங்கிரஸ் பிரசாரம் செய்யப்பட்டது.

ஸ்ரீமான்கள் எஸ். பி. வி. தாஸ், டி டி டானியல், பி. ஏ. பி எல் டி. தாமஸ், பி. ஏ எல் டி. எம். சண்முகம் முதலியோர் தி. த. நா. காங்கிரஸின் தோற்றம் லட்சியம் முதலியவை குறித்துப் பேசினர்.

கடைசியாக சென்னை தமிழ் நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர் ஸ்ரீமதி சரளாதேவி பாண்டுரங்கம் பேசியதாவது:—

"ஸ்ரீ பட்டம் தாணுப் பிள்ளை உடனடியாக தமிழ மாகாணக் கோரிக்கையை வரவேற்க வேண்டும். ஏனெனில் இந்த கோரிக்கை அகில இந்திய காங்கிரஸ் கொள்கைக்கு முரண்பட்டதல்ல அதனால் தான் சென்னை பாகாண தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டியும் இக் கோரிக்கையை ஆதரிக்கத் தோடு அ. இ காங்கிரசிற்கும் தெரியப்படுத்தியிருக்கிறது எனவ இந்த நியாயமான கோரிக்கையைப் புறக்கணித்து விடு அதிகாரம் கிடைத்து விட்டது என்ற கர்வத்தால் திருவிதாங்கூர் தமிழர்களின் கோரிக்கையை நசுக்க முற்பட்டால் அதைப் பார்த்து தமிழ் நாடு தூங்கிக் கொண்டிராது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே மேன்மேலும் ச்ச்சரவு வளரும் படியாக வீண் வார்த்தைகளை செலவு செய்யாது உடனடியாக தமிழ் மாகாணம் அமைக்க ஒத்துழையுங்கள்."

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறலோடு கூட்டம் முடிந்தது.

கலாசாலைகளிலும் தாய்மொழியில் போதனை

கலைச் சொல்லாக்கல் கமிட்டி நியமிக்க சர்க்கார் உத்தேசம்

சென்னை, நவ 3—

கலாசாலைப் படிப்பில் வரும் விஞ்ஞானம் தொழில் சம்பந்தமான பதங்களுக்குப் பிரதேச பாஷைகளில் சரியான பதங்களை கண்டுபிடிக்க ஒரு சொல்லாக்கல் கமிட்டியை நியமிப்பது பற்றி சர்க்கார் யோசித்து வருகிறது.

ஹைஸ்கூல் வகுப்பு பாடங்களில் வரும் விஞ்ஞானம், தொழில் சம்பந்தமான வார்த்தைகளுக்குச் சமீபத்தில் சர்க்கார் பிரதேச பாஷைகளில் சரியான பதங்களை வெளியிட்டிருந்தது என்பது குறிப்பிடத்தகுந்தது. கலாசாலைகளிலும் பிரதேச பாஷைகளில் பாடங்கள் போதிக்கப்பட வேண்டும் என்று சர்க்கார் விரும்புவதால் மேற் கூறியவாறு ஒரு சொல்லாக்கல் கமிட்டியை நியமிக்கப் போகிறது.

ரஸ்தா வழியே ஸ்ரீநகருக்கு இந்திய துருப்புகள்

பிரஜைகளிடம் புது நம்பிக்கை

ஸ்ரீநகர், நவ 4—

ஸ்ரீ நகருக்கு தினந்தோறும் புது படைகள் வந்துசேர்ந்த வண்ணமாயிருக்கின்றன.

புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ரஸ்தா மார்க்கத்தில் ஒரு பெரிய அரூப்புப் பட்டாளம் ஸ்ரீநகரை நோக்கி சென்று கொண்டிருக்கிறது

இச்செய்தி காஷ்மீர் பிரஜைகளுக்கு பெரும் நம்பிக்கையை யளித்திருப்பதாக தெரிகிறது

காஷ்மீர் மந்திரி சபை

ஷேக் அப்துல்லா நியமித்திருக்கிறார்

ஸ்ரீநகர், நவ. 4—

காஷ்மீர், ஜம்மு ஆகியவற்றின் பிரதமர் ஷேக் அப்துல்லா கீழ்கண்ட மந்திரிசபை ஜாபிதாவை வெளியிட்டிருக்கிறார்:—

(1) பக்ஷி குலாம் முகம்மத்; உள்நாட்டு பாதுகாப்பு பட்டம் ஒதுங்கு.
(2) பண்டிட் ஜய்லால் கலீர்; உணவு
(3) குலாம் முகம்மத் சத்திக்ஸ்-உள்நாட்டு பாதுகாப்பு படை, படை திரட்டல், பயிற்சி, சாரணர்கள்.
(4) டாக்டர் எஸ். எம் பெஷீன்; பொது சுகாதாரம் சிறைச்சாலை.
(5) பண்டிட் ஷாம்லால் சரப்; சப்ளை.
(6) பண்டிட் காஷ்யபந்து; அகதிகள்.
(7) குவாஜா அஷன் உல்லா; போக்கு-வரத்து.
(8) குவாஜா குலாம் மொய்தீன்; தபால், தந்தி, டெலிபோன், ரோடு, விமான நிலையங்கள், ஜல சப்ளை, மின்சாரம்.
(9) சர்தார் புட்ஷ்சிங்-புனருத்தாரணம்.
(10) மௌலானா முகம்மத் சையத்; ஸ்ளம்பர இலாகா

பிரிட்டன் இறைச்சி இறக்குமதி குறைகிறது

லண்டன், நவ 4

டாலர் நாடுகளிலிருந்து உணவுப் பொருள்கள் இறக்குமதியை மாதத்தில் 120 லட்சம் பவுண் வீதம் குறைப்பதற்கு சாக்கார் முடிவு செய்துள்ளதாக பிரதமர் அட்லி தெரிவித்திருந்தார் அதனபடி பிரிட்டன் டாலர் நாடுகளிலிருந்து 3,800,000 பவுண் மதிப்புள்ள இறைச்சியை மாத விகிதம் குறைத்துவிட்டு மிகுதியைத் தான் இறக்குமதி செய்யும என்று கூறப்படுகிறது. (ராய்ட்டர்)

நியூயார்க் டைம்ஸின் பெல்கிரேட் நிருபர்

யூகோவிலிருந்து வெளியேற்றம்

பெல்கிரேட், நவ. 5

"உண்மையற்ற செய்திகள் தருவதாகவும் முரட்டுத்தனமான நடவடிக்கை உடையவராகவும்" குற்றம் சாட்டி நாடு கடத்தப்பட்ட நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையின் பெல்கிரேட் நிருபர் பிரான்டெல் தமது மனைவியோடு டரீஸ்டிக்குப் புறப்பட்டுவிட்டார்.

அவரது மனைவியாரை பெல்கிரேடில் தாமதித்து பத்திரிகைத் தொழிலில் ஈடுபட யூகோ அரசாங்கம் அனுமதிருந்தது. ஆயினும் அவரும் கணவரோடு புறப்பட்டுவிட்டார். (ராய்ட்டர்)

தற்கொலை

கொழும்பு, நவ 4

கெலிங்கந்தையென்னும் இடத்தில் ஒரு நீரோடைக்குப் பக்கத்தில் வி. அனுதஹாமி என்பவர் ஒரு மரத்தில் தூக்கிட்டுத் தொங்கிக் கொண்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது மரண விசாரணை அதிகாரி தற்கொலையால் மரணமென தீர்ப்பளித்தார்.

தேசியக் கொடியில் சிவனொளி பாத மலை

கொழும்பு, நவ 4

அகில இலங்கை அராபிஸ்தான் லீக் கூட்டம் பேருவளையில் நடந்தபோது இலங்கையின் தேசியக் கொடியில் சிவனொளி பாத மலையைப் பொறிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டத்துக்கு திரு. ஏ ஏ எம் எம், ஒஸ்மன் தலைமை வகித்தார்.

எகிப்தில் காலரா நிலைமை

7897 பேர் இதுவரை பலி

கெய்ரோ, நவ. 3

எகிப்தில் பரவிய காலரா நோயினால் இதுவரை மரித்தவர்களின் தொகை 7897 ஆகும்

கடந்த இருபத்து நாலுமணி நேரத்தில் 271 மரணங்கள் இதனால் சம்பவித்துள்ளன. 461 பேருக்குப் புதிதாக நோய் பீடித்துள்ளது. (ராய்ட்டர்)

அமெரிக்கா செல்ல அனுமதி இல்லை

சர். சி. பி. ராமசாமி ஐயருக்கு இந்திய சர்க்கார் தடை

திருவனந்தபுரம், நவ. 4—

திருவாங்கூர் மாஜி திவான் ஸர். சி. பி. ராமஸ்வாமி அய்யர் அமெரிக்கா செல்வதற்கு இந்திய சர்க்கார் 'பாஸ்போர்ட்' தர மறுத்துவிட்டார்கள்என்று 'கேரள பூஷணம்' என்ற கோட்டயம் தினசரி கூறுகிறது.

திருவாங்கூர் - கொச்சியை இணைக்க பாலம்

ரூபா ஏழரை லட்சத்தில் கட்ட திட்டம்

திருவனந்தபுரம், நவ 4—

கொச்சியை இணைக்க அரூர் அருகில் ஒரு பாலம் கட்டப்படுமென்றும் இதற்கு ஏழரை லட்சம் ரூபா செலவழிக்க இரு சர்க்கார்களும் திட்டம் போட்டிருக்கின்றனரென்றும் தெரிகிறது

சோமாலிலந்தில் ஊரடங்குச் சட்டம்

எகிப்தியர் கென்யா, நவ. 3

சோமாலியருக்கும்அராபியருக்கும் இடையில் நடந்த கலவரங்கள் காரணமாக இத்தாலிய சோமாலிலந்தின் ரு பகுதியில் ஊரடங்குச்சட்டம்பிறப்பிக்கப்படடுள்ளது.

இக்கலவரங்கள் காரணமாக எட்டு அராபியரும் ஒரு சோமாலியரும் மாண்டனர் 26 அராபியரும் 22 சோமாலியரும் காயமடைந்தனர்.

கலவரங்களின் காரணமாக ராணுவப் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படி நேரிட்டது.

கலவரத்தின் இடமான மொகாடிஷு பழைய சோமாலிலந்து இத்தாலியக் குடியேற்ற நாட்டின் தலைநகரமாகும் இப்போது இந்நகரம் பிரிட்டிஷார் கையில் சிக்கியுள்ளது. (ராய்ட்டர்)

வேலை நிறுத்தம் முடிவுற்றது

ஆக்ரா, கோல்ட்கோஸ்ட், நவ 3

கோல்ட்கோஸ்ட் அரசாங்கத்தின் ரயில்வேத் தொழிலாளிகள் கடந்த 11 நாட்களாக வேலை நிறுத்தம் நடத்தி வந்தனர். இப்பொது ஆப்பிரிக்க அரசாங்க அங்கத்தினரின் தலையீட்டால் இவ்வேலை நிறுத்தத்தை நிறுத்துவதற்கு அவர்கள் தீர்மானித்துள்ளனர். அவர்களது கோரிக்கைகள் பற்றி இப்போது விசாரணைகள் நடத்தப்படும். [ராய்ட்டர்]

தமிழ் நிலத்தில் பிரிட்டிஷ் பெயரா?

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் சிலையும் வேண்டாம்

தேச பக்தர்களுக்கே கௌரவம்

திருநெல்வேலி, நவ. 4—

"முனிசிபல் நந்தவனத்திலிருக்கும் ஐந்தாம் ஜார்ஜின் சிலையை உடனே அப்புறப்படுத்தி அதை சென்னை கண்காட்சி சாலையில் வைக்கும்படி இந்த சபை தீர்மானிக்கிறது" என்னும் தீர்மானத்தை கவுன்சிலர் ஸ்ரீ வை. சிவராமன் திருநெல்வேலி நகரசபை கூட்டத்தில் கொண்டுவந்தார். சேர்மன் ஸ்ரீ ப. ராமஸ்வாமி தலைமை வகித்தார் மேற்கண்ட தீர்மானத்தின் மீது, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அபிப்பிராயம்தெரிந்துகொள்ள வேண்டுமென்றும், ஷை பிரேரணையை காங்கிரஸ் தலைவருக்கு சேர்மன் அனுப்ப வேண்டுமென்றும் ஒரு திருத்தப் பிரேரணையை கவுன்சிலர் ஸ்ரீ எஸ் துரைசாமி கொண்டு வந்தார். ஸ்ரீ வை. சிவராமன் ஏற்றுக் கொண்டார். திருத்தப் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நவம்பர் 18ம் தேதி தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளை தினமாதலால் அத்தினத்தை நகரசபை பள்ளிக்கூடங்களிலும், முனிசிபல் ஆபீசிலும் கொண்டாடவேண்டுமென்றும் திருநெல்வேலி முனிசிபல் காரியாலயம் இருந்துவரும் கட்டிடத்திற்கு 'டென்டலென்ட் கட்டிடம்' என்று பெயர் இருந்து வருவதை மாற்றி 'வ உ. சிதம்பரம் கட்டிடம்' என்று அழைக்கப்பட வேண்டுமென்றும், 'டென்னிங்டன் மார்க்கெட்' டின் பெயரை 'நேத்தாஜி போஸ்" மார்கெட் என்று மாற்றப்பட்டிருப்பதையும் கவுன்சிலர் ஸ்ரீ எஸ். குற்றாலலிங்கம் பிள்ளை கொண்டுவந்த தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேறின.

"கடலைக் கண்டு பதறாதே தமிழா"

கரைகளைப்பாதுகாக்கும் வீரர்கள் வேண்டும்

சென்னை மந்திரி ஊக்க மூட்டுகிறார்

சென்னை, நவ. 8—

கடல் சாரணர் சங்க படையினர் நேற்று சர்வதேச சாரணர் விழாவுக்குச் சென்று வந்தவர்களை உபசரித்து பொதுக் கூட்டம் நடத்தினர். மந்திரி ஸ்ரீ பக்தவத்சலம் இக்கூட்டத்துக்கு தலைமை வகித்தார். சாரணர் சிறுவர் சங்கத்தின் தலைவர் ஸ்ரீ டி. எஸ். வைத்யநாதய்யர் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார்.

இவ் விழாவில் மந்திரி ஸ்ரீ பக்தவத்சலம் பேசுகையில் "இந்த மாகாணம் சுற்றிலும் சமுத்திரத்தால் சூழப்பட்ட மாகாணமாகும். ஆகவே இந்தக் கடலை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பழைய காலத்தில் தமிழர் கடலைக் கடந்து வாணிபம் செய்தனர்.

இக்காலத்திலோ சென்னை வாசிகளில் பெரும்பாலோர் சமுத்திரத்தினருகிலேயே வர பயப்படுகிறார்கள். வருங்காலத்தில் நமது கடற்கரை யோரத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் காத்து நிற்க வேண்டிய பெரும் கடமை நமக்கு உண்டு. கரையோரக் காவலர்கள் நியமிக்க வேண்டியிருக்கும். இதற்கு கடல் சாரணர் சங்கம் தக்க பயிற்சியளிக்கும். இதை எல்லோரும் ஆதரிக்க வேண்டும்" என்றார்.

ஸ்ரீ கணபதி வந்தனோபசாரம் கூறினார்.

15 அடி நீளமுள்ள மீன் கரையில் ஒதுங்கியது

கலாவெல்லர் கடற்கரையில் "மூலா" என்னும் ஒரு இன மீன் கரையில் வந்து ஒதுங்கிக் கிடப்பதை பார்வையிட பெருந்திரளான மக்கள் அங்கு வந்து குழுமினர். இம்மீன் 15 அடி நீளமுள்ளதாகவும் 12 அடி சுற்றுப் பருமன் உள்ள தாகவும் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையை ஆண்ட தமிழரின் ன்றைய கதி

இடையிலேவந்தசிங்கள சமூகம் தமிழரை அடிமைகளாக்க அடிக்கும் தப்பட்டம்!

தமிழரைத் தட்டியெழுப்பும் தமிழ்க் காங்கிரஸ்

உணர்ச்சியுற்றெழுந்து உங்களுரிமைகளை நிலைநாட்ட வலுப்பெற, தமிழ் மக்களே! முன்வருக!

(ச. லோரன்ஸ்)

தமிழ் எனும் சொல் தனித் தமிழ் பாஷை என்றும் மறு பாஷைகளின் கலப்பற்ற எழுத்துக்களால்ஆகிய வசனமே என்றும் கூறுவதில் ஐயமில்லை. இவ்வாறாந்தபாஷையைப்பேசிவரும் தமிழ்மக்களின்கதிஎன்ன? தமிழ் மக்களில் சிலர் இனிமையான தமிழ் பாஷையையும், தமிழ் அரசர்களையும், யாழ்ப்பாண சரித்திரத்தையும் மறந்து,பணத்துக்கும் உத்தியோக வாஞ்சைக்கும் அள்ளுப்பட்டு கலப்புற்ற சிங்களவரோடு சேர்ந்து சிங்கள நடன மாடுகின்றனர். அந்தோ அவர்களின் கதி என்னாகும்?

இலங்கைச் சரித்திரப்படி தமிழரும் சிங்களவரும் தனித்தனி செங்கோலோச்சி வந்தார்கள். அப்படியாக அரசு செலுத்த வேண்டிய காலமும் அண்மிவிட்டது. ஆனது பற்றியே சிங்களவர் தமிழருள் சிலரை தம்முடன் சேர்த்து இலங்கையை தமதாட்சிக்குட்படுத்த முயலுகின்றனர். நிற்க; யாம் தமிழர், சிங்களவரின் பண்டைகால இதிகாசத்தை சிறிது ஆராய்தல் நலமாகும்.

இலங்கையில் சிங்கள அரசுக்கு அடி கோலியவன் விஜயன். இவன் ஓர்துஷடன். துடுக்குள்ள துஷடனாயிருந்து ஜனங்களுக்கு இடர் விளைத்தமை கண்டு தந்தையாகிய சிங்கவாகு அவனையும், அவனது பரிவாரங்களையும் லாலா நாட்டினின்றும் கப்பலிலேற்றி அழியில் அலையவிட்டான். அலைந்துதிரிந்து இலங்கையை அண்மினான். இராட்சத வம்சத்தவளான குவேனியை மணந்து அரசு செலுத்தினான். பின் குவேனி விஜயனால் தள்ளப்படவே அவன் தனது இரு புத்திரருடன் வேற்றிடஞ் செல்லலானான். இரு புத்திரரின் சந்ததியாரே தற்போது வேடர் என அழைக்கப்படுவர். விஜயன் குவேனியை நீக்கி பாண்டிய ராசனின் புத்திரி விஜாயியை மணந்து கொண்டான். ஆகவே விஜயனும், அவனது பரிவாரங்களும் பெண் கொண்டதும் தமிழ் நாட்டிலே; கலந்து கொண்டதும் தமிழரோடேயாம் அன்னார் வட இந்தியாவில் ஆதித தமிழனோடு கலப்புண்ட ஒரு சாதியினரே என்பது பல்லோர் மதம் அவர்களைத் தமிழரில் முழுதும் வேறானவர்களெனத் தான் வைத்துக் கொள்ளினும் அவர்களது வேற்றிரத்தமாகிய சிலத் துளிகள் இலங்கையின் மூலந் தமிழ் பெருவெள்ளத்தில் என்னாகும்? விஜயனும், பரிவாரங்களும் இலங்கையில் பேசிய பாஷை எனு என இந்நாளில் சிங்களவர் கூறும் ஈழப்பாஷையே. இப்புதுப் பாஷை ஈழத்தாருடைய பழைய பாஷையாகிய தமிழின் திரிபே என்றது எனு எனனும் அதன் பெயராலாலும் விளக்கமாகும் சிங்களம் எனும் பெயரும் சிறீ-ஈழம் என்ற இரு சொற்களால் இயன்றது என்பர் ஆன்றோர். சிறீ-ரங்கம், சீ-ரங்கம் என வந்தது போல சிறீ—ஈழம் சீ-ஈழம், சீ-ளம், சிகளம், சிங்களம் எனத்திரிந்தது என்பர். இதனால் என்ன பெறப்படுகின்றது. பெரும் பான்மை என்று கூறப்படும் சிங்களவர் ஆதியில் தமிழர்; அவர்களின் பாஷையும் தமிழினின்று உண்டாகியது இன்றைக்கும் சிலர் பந்தோடு மக்கோனு ஈழருக ஒரு காலத்துத் தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறிய தமிழர் நாளடைவில் சிங்களவராக வருதலுக்கண் கூடு

இன்னும் புத்தமத போதகர்கள் தங்கள் பாளி பாஷையையும், சிறுபான்மைச் சமஸ்கிருத சாற்களையும் கொண்டு வந்து எலு என மருவி நின்ற தமிழோடுகலந்தினால்சொற்றொகுதியளவில் பெரும் பான்மை பாளியைக்கொண்ட பிற்காலத்துச் சிங்களப் பாஷை தோன்றுவதாயிற்று. ஆகவே சிங்களம் அடிப்படையில் தமிழாயிருப்பது போலவே சிங்களவரும் அடிப்படையில் தமிழரேயன்றி வேறொரு சாதியாரல்லர் என்பது புலப்படும்.

முற்காலம் தமிழ் இராச்சியமான ஈழ மண்டலத்தின் எல்லைகள் எவையெனில், வடக்கேயும் கிழக்கேயும் வங்காளக் கடலாக்கடல்; மேற்கே காரைதீவு, வேலணை, மண்டை தீவு, நெடுந்தீவு, அனலை தீவு, நெடுந்தீவு எனும் தீவுகளை உட்படுத்திய கடல், தெற்கே திரிகோணமலையினின்றும் புக்குளத்தை யடக்கிய கற்பிட்டியிற் தெற்கெல்லை ஈறாக இழுத்த ஓர் நெடும் ரேகை இடைபெரும் பரப்பினுள் வன்னிப் பற்றுகளும் மன்னார் மாதோட்டமெனும் பிரிவுகளும் அடங்கும் அறிவும் சேதுக் கரையிலுள்ள இராமேஸ்வரத் தீவும் ஓர் நாள் யாழ்ப்பாணத்தை சார்ந்திருந்தது. செயவீரசிங்கையாரியன் எனும் தமிழ் அரசன் யாழ்ப்பாணத்தைஇராசதானியாகக்கொண்டு இலங்கை முழுவதையும் தனிக்குடை நிழற்றி வந்தானென யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. அல்லாமலும் இலங்கையின் தென் பகுதியை பராக்கிரம பாகு எனும் மன்னனுக்கு ஈந்து தனக்குத் திறை கொடுத்தாளும்படி செய்தான்,

எல்லாளன் எனும் நீதி நெறி தவறாத தமிழ் மன்னன் தனக்கெதிர்ப்பட்ட பகைஞரை எல்லாம் தோற்கடித்து ஜெய பேரிகை முழக்க அனுராதபுரத்தையடைந்து அசேலனைக் கொன்று தானே அரசனாகி கவன்தீசன் ஆண்டுவந்த மாயா, உறுகுணை எனும் நாடுகளை அவனே ஆண்டு திறை செலுத்தும்படி ஒட்டஞ்செய்து தமிழரின் பெருமையை நிலைநாட்டினான். தனது ஆராய்ச்சி மணியின்மூலமாக மக்களைப் பரிபாலித்துவந்தான். தற்கால நிலையென்ன?

நிலையாக வட கீழ் மாகாணங்களையும், இடைக்கிடை இலங்கையையும் ஆண்ட தமிழரை கலப்பற்ற சிங்களவர், தமிழருக்கு இலங்கையில் இருக்க இடமில்லையென்றும், அவர்களுக்கு இடம் மலையாவிலும், தென்னிந்தியாவிலும் என்று கூறி ஓட்டை யேளத்தில் கைதட்டித் திரிகின்றார்கள். தாங்கள் பண்டு இலங்கையை ஆட்சியாகக்கொண்டால் தமிழரை மலையாவுக்கும் தென்னிந்தியாவுக்கும்அனுப்பாதது ஏன்? இலங்கை சிங்களவருக்கு உரித்தென்றால் தமிழரைச் சிங்களவராக்காதது ஏன்? யாது காரணத்தினால் இந்தியத் தமிழரை இலங்கையில் வசிக்க இடங்கொடுத்தனர். பந்துக் கட்டாக இருக்கும் தமிழ் மக்களைப் பரிக்கச் சூழ்ச்சி செய்கின்றனர், அங்கிருக்கத்தித் சிங்களவர். ஆகில இலங்கைத்தமிழ்க்காங்கிரசுடன் எதிர்க்கின்றார்கள். அதை வகுப்புவாதக் கட்சி என்கிறார்கள், ஜீ ஜீ யைக் காணத் தயங்குகின்றார்கள்.

தமிழரை சிங்களவருக்கு விற்றவடு நீங்கிவிட்டது திரு. ராஜிநாமாச் செய்ய நேரிடும்.

பிக்பாக்கெட்டுக்கு 6 மாதச் சிறை

கொழும்பு, நவ 5

மருதானை ரயில்வே நிலையத்தில் செப்டம்பர் 23-ம் தேதி கே பி சோரிஸ் எனபவருடைய பாக்கெட்டில் இருந்து பணத்தையும் ரயில்வே பிளாட்பாரம் டிகட்டையும் களவாடியதாக குற்றம் சாட்டப்பட்ட ராகமத்தைச் சேர்ந்த டபிள்யூ டொன் சீமன் என்பவர் இதற்கு முன்னும் தாம் இரு குற்றங்கள் புரிந்ததை ஒப்புக்கொண்ட தன் பேரில் கொழும்பு அடிவுனல் மாஜிஸ்டிரேட் ஒரு பிரேட் ஈ அலெஸ் எதிரிக்கு 6 மாதச் சிறைத் தண்டனை விதித்தார்

தொழிலாளருடன் பந்தரி மகாநாடு

நோட்டன் பிரிட்ஜில் நடந்தது.

கொழும்பு, நவ. 5

நோட்டன் பிரிட்ஜிலுள்ள நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்டத்தையிட்டு நடக்கும் வேலைகளை போக்கு வரத்து மந்திரி திரு ஜே எல். கொத்தலாவல இரு நாட்களாகச் சுற்றி பார்வையிட்டார். திங்கட்கிழமை சுமார் 1500 தொழிலாளர்கள் அடங்கிய மகாநாட்டில் அங்குள்ள வேலைகளைப்பற்றியும் அதனை காலநேரத்துடன் செய்து முடிப்பதால் தேசத்துக்கு ஏற்படக் கூடிய நன்மையைபற்றியும் குறிப்பிட்டதுடன் தொழிலாளர் குறைகளையும் கூறும்படி கேட்டுக் கொண்டார் பின்னர் தொழிலாளர் பிரதிநிதிகள் தங்கள் குறைகளை தெரிவித்தனர். மகாநாடு சுமார் 2 மணி நேரம் நடைபெற்றது.

பாலஸ்தீன் பிரச்னை

அறிஞர் வாலஸ் கருத்து

நியூயார்க், நவ 4

ஐரோப்பா, மத்திய கிழக்குப் பகுதியில் மூன்று வார சுற்றுப் பிரயாணம்செய்து மீண்டிருக்கும் மாஜி அமெரிக்க உப ஜனாதிபதி ஹென்றி வாலஸ் பாலஸ்தீன் சம்பந்தமாகப் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

பாலஸ்தீனில் பிரிட்டிஷ் துருப்புகளை வாபஸ் பெற்ற பின் அங்கு பிரமாதமான ரத்தக்களரி ஏற்பட்டு விடுமென்று நான் நம்பவில்லை. இங்கு சொல்லப்படுகிறமாதிரி நிலைமை அவ்வளவு மோசமில்லை.

(ராய்ட்டர்)

கதிர்காமத்தில் மகா கார்த்திகை உற்சவம்

கொழும்பு, நவ. 5

கதிர்காமத்தில் மகா கார்த்திகைக் கொண்டாட்ட உற்சவம் இம்மாதம் 27, 28-ம் தேதிகளுக்கு வைக்கப்பட்டுள்ளது 27-ம் தேதி இரவு பெரஹரா நடைபெறும்.

தேசீய சேமிப்பு சபைகள் 25 பதிவு செய்யப்பட்டன

கொழும்பு, நவ. 4

தேசீய சேமிப்பு கமிஷனர் அறிக்கைப்படி செப்டம்பரில் 25 புதிய தேசீய சேமிப்பு சபைகள் பதிவு செய்யப்பட்டுள்ளனவென்றும், வேறு எட்டு தேசீய சேமிப்பு சபைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளனவென்றும் கூறப்படுகிறது. செப்டம்பர் முடிவில் இலங்கையில் 5934 தேசீய சேமிப்பு சங்கங்களும் சுமார் 180,484 அங்கத்தவர்களும் இருந்தனர் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளன.

விதியின் கதி!

பதுளை, நவ. 4

பதுளையில் சொரணதோடா என்னும் இடத்தில் கே. எம். கிரி பண்டா என்பவர் தமது மனைவியையும் பிள்ளைகளையும் சிகிச்சைக்காக ஒரு ஆஸபத்திரியில் சேர்த்துவிடடு வீடு திரும்பினாரென்றும் அங்கே பலாப்பழம் ஒன்றைப் பறிப்பதற்காக பலா மரத்தில் ஏறியவிடத்து தவறி விழுந்து காயமடைந்தால் அவரும் அதே ஆஸபத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டாரென்றும் அங்கே மனைவி பிள்ளைகள் பார்த்துக்கொண்டிருக்க அவர் மரணமடைந்தாரென்றும் கூறப்படுகிறது.

லொறி விற்பனைக்கு

சவர்லட் 2, 2½, 3, 3½ டன் லொறிகள் விற்பனைக்கு இருக்கின்றன. பொடி முதல சகல மும புதியது.

எம். எஸ். மெண்டிஸ்,
238, பஞ்சிகாவத்தை ரோட்,
மருதானை.

அரிய நூல் வெளிவந்து விட்டது!

பாக்கிஸ்தான் விளக்கம்

ஜனாப் துர்ராணி அவர்களால் எழுதப்பட்ட "MEANING OF PAKISTAN" என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு பாக்கிஸ்தானைப் பற்றி இம்மாதிரியான நூலொன்று இதுவரை தமிழில் வெளியானதில்லை.

அழகிய முகப் படம்

320 பக்கங்கள் கிளேஸ் கடிதம்

சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

முந்துங்கள் விலை ரூ. 3-50
இந்தியா ரூ. 3-8-0.

V. P. வேறு

கிடைக்கும் இடங்கள்:-

V. M. ஷம்சுத்தீன்,
85, பழைய சோனகத்தெரு,
கொழும்பு.

எல். கே. ஷேக் முகம்மது,
பிரதர்ஸ் மரைக்கார் கடை)
பூக்குளம் பார்க்கிற்கு எதிரே
திருச்சினாப்பள்ளி.

இருமல் இளைப்பு சுகம்

T. B. & Asthma

இருமல், கபக்கட்டு, கபத்துடன் இரத்தம் விழுதல், மாலை நோய்களில் சுரம் வருதல், உடம்பு இளைத்து வருதல் உள்ள [T.B.] க்ஷயரோகத்திற்கும், இளைப்பு, ஏங்கல், மூச்சுத்தினறல், பிளிசம், தடுமன் ஆகிய உபாதைகளுடன் கூடிய (Asthma) சுவாசகாசம் மந்தாரகாசத்திற்கும் நிகரற்ற சஞ்சீவி.

20 வருட அனுபவம் பெற்ற மருந்துகள். ஆயிரக்கணக்கான பேர்கள் சாப்பிட்டுச் சுகம்பெற்றது.

25 நாள் தாளகபஸ்பமும், சித்திர மூலச்சூரணமும் ரூபா 12-8-0

தண்டபாணி வைத்தியசாலை,
பெரியகடை வீதி, பழனி. (S. I.)

பிடிச் சக்கரவர்த்தி.

த.பி. சொக்கலால் ராம்சேட் பீடி

2 பீடிரிங்லேபில்

சொக்கலால் ராம்சேட்

T.B. சொக்கலால் ராம்சேட்.

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது

இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும், இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது. அத்துடன் மனதிற்கு நல்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கியவியாபாரிகளிடமும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,
71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸதர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாக்ஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுததர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெளை.

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

பதவிகளைக் கைப்பற்றிய சட்ட விரோதிகள்

தங்கள் இஷ்டத்திற்கு சட்டத்தை திருத்தும் விசித்திரம்!

பாராளுமன்றத்தின் அபிப்பிராயத்தைப் புறக்கணித்து இங்கிலாந்தை எதிர்பார்க்கும் தப்பிலிகள்

நேற்றுமுன் தினம்மாலை வெளிவந்த "லங்கா தீப" எனும் சிங்களப் பத்திரிகை எழுதிய ஆசிரியத்தலையங்கத்தின் தமிழாக்கம்:

சில தனிப்பட்ட நபர்களின் சுடலாபத்திற்காக அரசியல் சட்ட பிரமாணத்தை மாற்றுவது-சீர்திருத்துவது - இப்பொழுது மட்டுக்கு மிஞ்சி அதிகரித்துக் கொண்டு வருவது, கரை கடந்து விட்டதென்பதை அறிவுள்ள பொதுமக்கள் அறிந்து ஆச்சரியப்படுவார்களென்பது நிச்சயம். இப்படியெல்லாம் மாற்றவதற்கு - சீர்திருத்துவதற்கு-இடமிருக்கக்கூடியமுறையில் இந்த அரசியல் சட்ட பிரமாணங்களை இயற்றிய சட்ட நிபுணர் ஆச்சரியமானமேதாவியென்றுதான் கருதவேண்டியிருக்கிறது. எனினும், அந்த சட்ட மேதாவியிடமதற்போது செய்யப்படும் சட்ட மாற்றங்களைப் பற்றி கேள்விகேட்டால் அவர், தன்னால் இயற்றப்பட்ட சட்ட பிரமாணங்களில் அவசியம் மாற்றக் கூடிய அம்சமே இல்லையென்றுதான் சொல்லுவார்.

இப்படியெல்லாம் அரசியல் சட்ட பிரமாணங்களில மாற்றமோ-சீர்திருத்தமோ செய்யாவிட்டால் இப்பொழுதுப்தவியிலிருக்கும் மந்திரிகளில சிலர் ராஜிநாமாச் செய்ய நேரிடும் என்பது நிச்சயம். இந்தப் பதவிகளை யெல்லாம் வேறு நபர்கள் வகித்து வந்தால் அரசியல் சட்டப் பிரமாணங்களை மாற்ற வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. தற்போது செனட்டர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்களில் சிலருக்கும், தற்போதைய அரசியல்சட்டத்தை மாற்றுவிட்டால் மேலும் செனட்சபையில் அங்கம் வகிக்க தகுதியற்று விடுவார்கள். எதிர்காலத்தை யுத்தேசித்து, தனிப்பட்ட நபர்களைப் பற்றி விசேஷத்துவம் காட்டாமல்,நடுநிலையில் இயற்றப்பட்ட அரசியல் சட்ட பிரமாணங்களுக்கு ஏற்றவாறு அந்தந்த பதவிகளுக்கு தகுந்தவர்களை நியமித்திருந்தால் இப்படியெல்லாம் பொதுமக்கள் வெறுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

அவை எப்படியாயினும் அரசியல் சட்டப் பிரமாணங்களை அததியாவசியமாக மாற்றவோ-சீர்திருத்தவோ வேண்டுமென்றால் பார்லிமெண்டின் விருப்பத்திற்கு-பொதுஜனப் பிரதிநிதிகளின் விருப்பத்திற்கு-ஏற்றாற்போல் செய்ய வேண்டுமேயொழிய, "சர்வமும் இங்கிலாந்திலிருந்தே செய்யப்பட்டு" வருவழைப்பது மிகவும் அடாததானதென்று கண்டிப்பாகச் சொல்ல விரும்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை விவசாயம் கைத்தொழில்

தொழிலாளர் பிரச்னை தீரவழி

திரு. ஏ. பி. பெரேரா பிரசங்கம்

கொழும்பு, நவ. 5

கிறிஸதவ வாலிபர் சங்கத்தின் பொருளாதார கலகத்தின் ஆதரவில் நடைபெறற கூட்டத்தில் திரு ஏ. பி. பெரேரா பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

நம் நாட்டில் உணவுப் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து இறகுமதியாவதைத் தவிர்த்து நாட்டிற்கு தேவையான உணவுப் பொருட்களை நாமே உற்பத்திசெய்யவேண்டிய நிலையை ஏற்படவேண்டுமானால் திட்டங்களமைதது விவசாய உற்பததியைப் பெருக்கவேண்டும். நம் நாட்டிற்குத தேவையான கைததொழில் உற்பததிப் பொருட்களை நாம உறபததிசெய்ய கைததொழில்களை அபிவிருததி செய்யவேண்டும். உள்நாட்டுக் கைததொழில் வெளிநாட்டுப் போட்டியால் நசிந்து போகாதிருக்க இறக்குமதிகளுக்கு அதிக வரி விதிகும்முறையான பாதுகாப்புவரி விதிகப்படவேண்டும். கைத்தொழில் அபிவிருத்திக்கு நம் நாட்டில் போதிய மூலப பொருட்களிருக்கின்றன. அரசாங்க நிர்வாகததிற்குட்பட்டு கைத்தொழில்கள் தேசீயமயமான முறையில நடைபெற்றால்தான் அபிவிருத்தி அடைய முடியும். இதற்கு ஒரு தலைமுறைகாலம் பிடிக்கும்.

அதற்கிடையே உடனடியாக நாம் செய்யவேண்டிய வேலை என்ன வெனில் தேயிலை. ரபர், தென்னை பொருள இவைகளின் உற்பத்தி சம்பந்தமான கைததொழில்கள் தேசீயமயமாக்கப்பட்டு சர்க்கார் நிர்வாகத்திலும் கடடுப்பாட்டிலும் நடைபெற வேண்டும் அப்படிச் செய்தால்தான் நாம் நமது விளைபொருட்களுக்கு தகுந்த விலைகளைப் பெறுவதுடன், உலகிலே இயங்கும் விலை வாசிகளின் ஏற்றம்தாழ்வுகளுக்கு ஏற்ப நாம் நமது பொருட்களுககு வசதியான விலை மதிப்புகளைப் பெறமுடியும்.

கைத்தொழில்கள்தேசீயமயமாக்கபபடடால் தான், இப்பொழுது இலங்கையில் இருந்துவரும் தொழிலாளர் சம்பந்தமான பல பிரச்னைகளை சுலபமாகத தீர்க்க முடியும். இந்தியத் தொழிலாளி சுதேச தொழிலாளி என்ற பிரச்னை, தொழிலாளி வர்க்கம் என்ற பிரச்னை மீத நடைபெறும் உள்நாட்டு சச்சரவுகள் ஆகியவை ஒழியும்.

திரு பெரேரா "நமது பொருளாதார முன்னேற்றம்" என்னும் விஷயம் பற்றி தொடர்ந்தாற்போல் மூன்று பிரசங்கங்கள் நிகழ்ததுகிறார். மேலே குறிப்பிட்டிருப்பது அவர்செய்த முதலாவது பிரசங்கததின் சாராம்சம். இன்று அவர் "பொருளாதாரததிட்டமும் அரசாங்கத்தின் நிர்வாகமும்" என்னும் விஷயம்பற்றிப் பேசுவார்

கடுகன்னுவை அர்பன் சபை

இருவருக்குப் போட்டியில்லை

கடுகன்னுவை, நவ. 5

கடுகன்னுவை அர்பன் சபையின் ஆறு வார்டுகளுக்கும் அபேட்சகர்கள் நியமனப் பததிரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதில் 5-ம் 6-ம் வார்டுகளில இப்பொழுது அரபன் சபை அங்கததவர்களாக இருந்த திரு. ஜேமஸ ராஜ பக்வு திரு. கே. முடியான்ஸே ஆகிய இருவருக்கும போட்டியில்லாததால் அவர்கள் இருவரும் தெரிவு செயயபபட்டனர். மற்ற நான்கு தொகுதிகளிலும் போட்டியிருக்கிறது.

சிலாபம் அர்பன் சபை

நான்வருக்குப் போட்டியில்லை

சிலாபம், நவ. 5

சிலாபத்திலுள்ள அர்பன் சபையின் 9 வார்டுகளுக்கு அபேட்சகர்கள் தங்கள் நியமனப் பததிரங்களைத தாக்கல் செய்துள்ளனர். இதில் நான்கு வார்டுகளில (வார்டுகள் 3, 4 5, 7) போட்டியில்லை. மற்றுய ஐந்து வார்டுகளிலும் போட்டியிருககிறது. இநத அர்பன் சபைத் தேர்தல 29-ம் தேதி நடைபெறும்.

ஹங்கேரி எதிர்க்கட்சித் தலைவர் கம்பி நீட்டினர்

ருமேனிய தேசத் துரோக வழக்கு

சோவியத் நிருபர்களுக்கு பிரிட்டிஷ் தடை

புடாபெஸ்ட், நவ. 4

தேர்தல் காலத்து மேசாள் சம்பந்தமாகக் கடுமையான சாட்குகலுக்கு ஆளாகி வந்த ஹங்கேரி சுதந்திரக் கட்சித்தலைவர் சொல்டான் பீபெர் இன்றுமது நாட்டில் இருந்து மாயமாய் மறைந்துவிடடார். பிரதாப நபர் மீது கடந்த வருஷம் நீதி மந்திரியாக இருந்தபோது சிறை வைக்கப்பட்ட ஒருவரை முறை கேடாக விடுதலை செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது. இக்குற்றத்திற்காக அவரைக் கைது செய்ய அனுமதிக்கும்படி பாராளுமன்றத்தை கோர்ட்டார் கேட்டிருந்தனர்.

இவரது காரியதரிசி ஜோசப காவும், இன்னொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இது பற்றிப் பிரஸ்தாபித்த உள்நாட்டு மந்திரி கார்யாலயம் பீபெருக்கு ஒரு ஒற்று வேலை ஸ்தாபனத்திற்கும் சம்பந்தம் இருக்க வேண்டும் என்றும் குற்றம் சாட்டியது.

டோஸ்யேட்டட் பிரஸ் செய்தி ஸ்தாபன புடாபெஸ்ட் தலைவர் இங்கிருந்து நீடுகடதப்பட்டார். ஸதாபனக் காரியதரிசி எலிசபெத பலோஸ் ஒற்று வேலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டிருக்கிறார் செய்தி ஸதாபனத தலைவர் "அன்னிய நாட்டு நிருபர்கள் அனுஷ்டிக்க வேண்டிய பத்திரிகை தர்மத்தை அனுஷ்டிக்கத் தவறியதோடு ஏனைய அன்னியநாட்டு நிருபர்கள் நடவடிக்கைக்கு பாதகம் விளைததாக"க் கூறப்பட்டார். இன்று காலை இவர் நாட்டை விட்டு வெளியேறுவார் என்று எண்ணப்படுகிறது

ஒட்டாவா, நவ 4

போலந்தின் பழைய கானடா பந்திரி டோலநதலிருந்து தபி அமெரிக்கா போய்க கொண்டிருப்பதாக போலந்து அரசாங்கததிற்கு விரோதமான கோஷ்டிகள் இநத கறின இச் செய்தியின்படி அவர் இநத லி சறு அங்கிருந்து அமெரிகக போவார் என்று தொகிறது.

டாக்டர் ஜூலியுஸ மனியு முதலான 15 போகள் மீது தேசத துரோகக் குற்ற விசாரணை சபை முன்னர் இன்று பாரதூரமான தேசததுரோக வேலையில் ஈடபட்டிருந்ததாகக குற்றம் சாடடப்பட்டது. எதிரிகளில் நால்வர் நாட்டைவிடு ஓடி விடடதன் காரணமாக அவர்கள் இல்லாமலேயே அவர்கள் மீது வழக்கு நடக்கிறது.

அமெரிகக உத்தியோபெற்ற பெர்லின் பத்திரிகையின் அரசியல் நிருபர் சோவியத பிரதேசத்திற்குப்போனதாகவும அதன் பின் மளவலலையென்றும் தொகிறது.

சோவியத் குற்றச்சாட்டு

மாஸ்கோ, நவ. 4

சோவியத் பததிரிகை எழுதாளகள் ஜெர்மனியின் பிரிடடிவு வட்டாரதிற்குச் சென்றபோது ஸ்வஸதிக் அடையாளமுள்ள பாஸிஸட் கூட்டத்தினர் கல்லால் எறிந்ததாக 'ட்ரட்' பததிரிகை குற்றம் சாடடுகிறது. "பிரிட்டிஷ மோஸதர் பததிரிகை சுதந்திரம்" என்னும் கட்டுரையில மேற்படி எழுத்தாளர்கள் அதிகாரிகளுடச் செய்த முறையீடுகளால பலன் உண்டாகவில்லையென்று கூறி "குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும்" என்று கோரப்படடிருககிறது.

சோவியத் பத்திரிகையாளர் கண்ணிலிருந்து பல பொருட்கள் மறைக்கப்பட்டன. எனபனில் உள்ள சில செடிகளையும சட்ட விரோதமாக பிரிடடிஷார் தம் கையில வைத்திருககும் சோவியத் குழந்தைகளையும் பார்க்க இவ்வெழுததாளர்கள் அனுமதிகப்படவில்லை

பிரிட்டிஷ் அமெரிக்க வடடாரங்களில சோவியத் பத்திரிகை நிருபர்களுக்கு பல பொருட்கள் மூடுமந்திரமாக வைக்கப்படுவதை 'பிரவ்டா' பத்திரிகை கண்டித்திருக்கிறது. "இததமது பகுதியிலுள்ள மோசமான பொருளாதாரச் சீரழிவைப் பொது ஜனங்களிடமிருந்து மறைக்கும முயற்சி" என்று அது கூறுகிறது. (ரா)

கலைக் கழகத்திற்கு இளவரசி தலைவர்

ஆடம்பரமான ராஜ குடும்ப கலியாணத்திற்குப்பராடடா?

வட அயர்லாந்து ஏழைகள் பிரதிநிதியின் ஆட்சேபனை

லண்டன், நவ 5

இன்று பிரிட்டிஷ் கலைக் கழகத்தின் 1947-வது வருடாந்தக் கூட்டம் நடைபெறுகிறது இக்கூட்டத்தை எலிஸபெத இளவரசி ஆரம்பித்து வைகிறார். அவர் மூன்று மதங்களுக்கு முன்பே இக் கழகத்தின் தலைவராக நியமிக்கபடடுள்ளார். இக்கழகத்தின் செநற்பொழிவு மண்டபம் ஜெர்மன் விமானக் குண்டாலே சேதமடைந்து இப்பொழுது மறுபடியும் பார்க்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டிருகிறது. அதையு அவர் பார்வையிடுவார்.

விஞ்சர் கோமகனும் விஞ்சர் கோமகளும் நேற்று பிரான்ஸிலுள்ள கலை நகரிலிருந்து இங்கு டோவர் நகர் வந்து சேர்ந்தனர். அவர்கள் இன்று சௌதாம்டனிலிருந்து 'குயீன் மேரி' கடலில் ஏறி அமெரிக்காவுக்குப் பயணமாகிறார்கள். நேற்றிரவு அவர்கள் பன்னிங்டேலிலுள்ள லார்டு டடலி மாளிகையில் விருந்தினர்களாகத் தங்கியிருந்தார்கள்.

புதிய அரசியல் திட்டப்படி மால்டா தீவில் ஏற்பட்டுள்ள சட்டசபையை நவம்பர் 10-ம் தேதி திறந்துவைக்கும் பொருட்டு ஞாயிற்றுக்கிழமையன்று மகனரின் சகோதரரான கிளஸ்டர் கோமகன், கிளாஸ்டர் கோமகளுடன் மால்டாவுகுப் புறப்படுவார்.

எலிஸபெத் இளவரசி கலியாணத்தின் போது அரண்மனையின் குதிரைப் பட்டாளங்களுக்கு பரம்பரையான சடங்கு உடைகள் அணிவிக்கப்படும்.

நேற்று லண்டன் நகரசபை சார்பாக லார்டு மேயரும் மற்றும் நகரப் பிரதிநிதிகளும் பகிங்ஹாம் அரண்மனை சென்று பாராட்டுச் செய்தியை சமர்ப்பித்தனர். லார்டு குறித்த நேற்று லார்டு சபையில் லார்டு அடிஸன் பிரஸ்தாபித்தார்.

தென்னாபிரிக்க பிரதமர் ஜெனரல் ஸ்மட்ஸ் லண்டன் வருமபோது எலிஸபெத் இளவரசிக்கு தென்னாபிரிக்கா வழங்கும் கலியாணப் பரிசைக் கொண்டுவந்து சமர்ப்பிப்பார்.

நியூ வுண்டலந்து எலிஸபெத் இளவரசிக்கு வழங்கும் கலியாணப் பரிசான அறபுதமான பறவை இறகு உடை லண்டனில் தயாரிகக்பட்டு வருகிறது. இதே போன்று கானடா அளிக்கும் பரிசை, கானடா பிரதமர் மாகென்ஸி லண்டன் வரும் போது கொண்டுவந்து சமர்ப்பிப்பார்.

வட அயர்லாந்து அளிகக விருக்கும் கலியாணப் பரிசு பெல்பாஸ்ட் நாரில தயாரிக்கப்பட்டு வருகிறது.

இளவரசி கலியாணத்தை முன்னிட்டு வட அயர்லாந்து பார்லிமெண்டில் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது தேசீயக் கட்சி அங்கததினர்கள் வெளியேறினர்கள் டயமண்ட் என்ற சமதர்மக் குடியரசுக் கட்சி அங்கததினர் தீர்மானததை எதிர்த்து வாக்குக் கொடுததபோது தான் பெல்பாஸ்ட் நகரில ஏழை மக்கள் வதியும் குதியின் பிரதிநிதியென்றும் ஆதலால் ஆடமபரானராஜ குடும்ப கலியாண வைபவங்களைப் பாராட்டுவது தனக்கு சமமதமில்லை யென்றும் தெரிவித்தார். [ராய்ட்டர்]

மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது

கொழும்பு, நவ 5

கொழும்பு சுப்ரீம் கோர்ட்டினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட கொடெல்லா டதிராஜ் பியசேனா என்னும் மேதிய சிங்கோவின் மரண தண்டனை வெளிக்கடை சிறைச்சாலையில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

பிரிட்டன்

கசையடி, கடுமிய தண்டனை ஒழிப்பு

இடைக்கால வரவு செலவுத் திட்டம்

கன்சர்வேடிவ்கள் வால் நீட்டுகின்றனர்

லண்டன், நவ 5

குற்றம் செய்கறவர்களுக்கு தண்டனை விதிக்கும் சட்டதைத் திருததி ஒரு மசோதா பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிறது இப்புதிய மசோதாவின்படி இனி பிரிட்டனில் குற்றங்களுக்காக தண்டனை பெறும் கைதிகள் கொடுந் தண்டனைக்குட்படமாட்டார்கள். இம்மசோதாவின்படி கசையடி, சடுதியம் முதலிய கைதிகளுக்களிக்கப்படும் கொடுந் தண்டனைகள் ஒதிகப்படுகின்றன. 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு சிறை தண்டனை கிடையாது. சீர்திருத்தமுடியாத குற்றவாளிகளாக இருந்தால் 15 வயதுக்கு மேற்பட்டு 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு விதிவிலக்காக சிறைத் தண்டனை விதிக்கப்படலாம். 15 வயதுக்குக் கீழேயுள்ள குற்றவாளிகளுக்கு சிறைத் தண்டனை கிடையாது. 18 வயதுக்குக்கீழ்ப்பட்டவர்களுக்குமரண தண்டனை கிடையாது மரண தண்டனையை ஒழிக்கவேண்டுமென்பதுபற்றி மசோதாவில் எதுவும் குறிப்பிடப்படவில்லை

வரவு செலவுத் திட்டம்

நாடடின் பொருளாதார நெருக்கடியின் காரணமாக அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சர்க்காரின் இடைக்கால வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும்

பிரிட்டிஷ் முதலாளிகள் ஓலம்

இன்று மாஜ இந்தியா மந்திரி எல் எஸ் அமெரி பிரிட்டிஷ் கைததொழில ள முதலாளிகள் சங்கமும பிரிட்டிஷ் ஏகாதிபத்திய லீக்கும் சேர்ந்து நடததிய கூட்டத்தில் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- ஜனிவாவில் சென்ற வாரம் பிரிட்டன் கைச்சாததிட்ட வர்த்தக-வரி ஒப்பந்ததைக் கவனித்தால் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய வர்த்தக அபிவிருததிக் கொள்கை குழி தோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டதாகவே கருதவேண்டியிருக்கிறது ஏகாதிபதிய சலுகை வரி ஒழிக்கப்பட்டதால் சாம்ராஜ்ய நாடுகளிடையே நடைபெறும் வர்த்தகம் பாழாகும்.

பிரிட்டிஷார் குடியேற்றம்

சாம்ராஜ்ய நாடுகளில் பிரிட்டிஷார் குடியேறும் கொள்கை பற்றி லார்டு அடிஸன் இன்று லார்டு சபையில் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார் :- பிரிடடனின் ஆள் பலம் குறைந்தாலும் பிரிடடிஷ் சாம்ராஜ்ய நாடுகளின் சுபீட்சததில் பிரிடடன் கவனம் செலுததவேண்டும். நமக்கு ஆள தேவைப்படுவதுபோல சாம்ராஜ்ய நாடுகளுக்கும் தேவைப்படுவதால் இரண்டுக்கும் பொதுவாகயுள்ள தரும் ஐக்கியமான கொள்கையை நாம் அனுஷடிக்க வேண்டும். ஆஸ்திரேலியாவில் குடியேறச் சென்ற சில பிரிட்டிஷார் ஏமாற்றததுடன் திரும்பி வருவதற்குக் காரணம் அவர்கள் சரியான குடியேற்ற ஸ்தாபனத்தின் மூலமாகச் செல்லாததேயாகும். பிரிட்டனிலிருந்து ஆஸ்திரேலியாபோய்க் குடியேற 4 லடசம் பிரிட்டிஷார் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்திருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவில் ஆள் பலமிருந்தால் அது பிரிட்டனுக்கும் பலமளிக்கும்.

ஒரு நபருக்கு 8 பவுண் செலவு

இன்று காமன்ஸ் சபையில் பொக்கிஷ மந்திரி, உணவுப் பங்கீட்டிற்காக சர்க்கார் பண உதவி செய்வதுபற்றிப் பேசியபோது, ஒவ்வொரு நபருக்கும் உணவுக்காக சர்க்கார் 8 பவுண் செலவழிக்கிறது என்று தெரிவித்தார்.

கூட்டாட்சிக்கு ஆசை

முனிசிபல் தேர்தல்களில் கன்சர்வேடிவ் கட்சிக்கு வெற்றி ஏற்பட்டது சம்பந்தமாக கடசித தலைவர் லார்டு வுல்டன் பேசியபோது, அட்லி சர்க்கார் நாட்டின் நலனை முன்னிட்டு செனறதை மறந்து எர்ராஸத்தில் கூட்டு நிர்வாகததிறகு ஏற்பாடு செய்யுமென்று தான் நம்புவதாகவும் இதற்கு இணங்கவில்லையானால் கைத்தொழில் முதலாளிகள் நிலைமையைக் கைவிடுவார்களென்றும் பின்னர் நாடு தத்தளிக்குமென்றும் தெரிவித்தார்.

டன்காஸ்டர் தொகுதி தொழிற் கட்சி அங்கததினர் வால்டன் தொழிற் கட்சியிலிருந்து ராஜினாமா செய்துவிட்டார் அவர் பாராளுமன்ற அங்கததினர் பதவியையும் ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று தொழிற் கட்சியார் தீர்மானம் நிறைவேற்றினர்கள். (ராய்ட்டர்)

கிரவுன் தியேட்டர்

ஸ்கின்னர்ஸ் ரோடு மருதானை

இன்று காண்பிக்கப்படுவது! புத்தம் புதிய படம்!!

மகத்தான 2-வது வாரம்

தினசரி மாலை 6-15 இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்

சுவர்ணலதா-நஸீர் திறம்பட நடிக்கும்

வாமிக்-அஷ்ரா

என்னும் உன்னத ஹிந்தி பேசும் படம் காண்பிக்கப்படும்

சனி ஞாயிறு மெட்னியில் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் பால்கனிக்கும் 1-ம் வகுப்புக்கும் அரைச் சார்ஜ்

முன் இடம் தேடுங்கள்!

இலங்கை சுய தேவைப் பூர்த்திக்கு அரிசி சப்ளை

இருபத்து இரண்டரை லட்சம் ஏக்கர் உற்பத்தி செய்ய வேண்டும்

கொழும்பு, நவ 5

இலங்கையின் விவசாய நிலைமைபற்றி அறிய சுற்றுப்பிரயாணம் செய்த பர்மா விவசாய இலாகா டிபுடி டைரகடர் யூ தெட்சு தமது சுற்றுப்பிரயாணததை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பியுள்ளார். இலங்கை தனக்குப் போதிய அரிசி சப்ளையை உற்பத்தி செய்துகொள்ள வேண்டின் சுமார் இருபத்து இரண்டரை லட்சம் ஏக்கர் நிலத்தை விவசாயத்திற்கு கொண்டுவர வேண்டுமென்று அவர் கூறினார். மேலும் விவசாய அபிவிருததிபற்றியும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை வரும் இந்திய உதை பந்தாட்டக் கோஷ்டி

கொழும்பு, நவ 5

இந்தியாவிலிருந்து ஒரு உதை பந்தாட்டக் கோஷ்டி இலங்கைக்கு இம்மாத கடைசி வாரத்தில் விஜயம் செய்யும். இந்தக் கோஷ்டி இலங்கை முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்ய இலங்கை உதை பந்தாட்டக் கோஷ்டியின் அனுமதியைப் பெற்றுள்ளது பங்களூரில் உள்ள "ஆரியன் ஜிம்கானா" கிளப் இந்தக் கோஷ்டியை இலங்கைக்கு அனுப்புகின்றது.

வாசிகசாலை நிதிக்கு படக்காட்சி

மட்டக்களப்பு, நவ 5

மட்டக்களப்பு ஸ்ரீ சிவானந்தா வாசிக சாலையின நிதிக்காக மட்டக்களப்பு நியூ இம்பீரியல் தியேட்டரில் உபகாரப் படக் காடசி காட்டப்பட்டது மட்டக்களப்பு டிஸ்டிரிக்ட் நீதிபதி திரு பி ஸ்ரீஸ்கந்தராஜா தலைமை வகித்தார்.

எகிப்தில் வேலை நிறுத்தம்

பருத்தி ஏற்றுமதி பாதிக்கப்படலாம்

அலெக்ஸான்ட்ரா, நவ 4

அலெக்ஸான்ட்ரியாவில் 2000 பருததித் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்து விடடார்கள். இதன் பயனாக கலவரங்கள் நிகழ்வதைத் தடுப்பதற்காக எகிப்திய பேலிஸ பலம் அங்கு அனுப்பப்பட்டுள்ளது

இவ்வேலை நிறுத்தம் காரணமாக பருத்தி ஏற்றுமதி தற்காலிகமாக நிறுத்தப்படலாமென்று வர்த்தகர்கள் கருதுகின்றனர் [ராய்ட்டர்]

புவதாகவும் இதற்கு இணங்கவில்லையானால் கைத்தொழில் முதலாளிகள் நிலைமையைக் கைவிடுவார்களென்றும் பின்னர் நாடு தத்தளிக்குமென்றும் தெரிவித்தார்.

டன்காஸ்டர் தொகுதி தொழிற் கட்சி அங்கததினர் வால்டன் தொழிற் கட்சியிலிருந்து ராஜினாமா செய்துவிட்டார் அவர் பாராளுமன்ற அங்கததினர் பதவியையும் ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று தொழிற் கட்சியார் தீர்மானம் நிறைவேற்றினர்கள். (ராய்ட்டர்)

மேலும் அதிக விபரம் வேண்டும்

ரஷிய 5 அம்சத் திட்டம் பற்றி பிரிட்டன்

லேக்ஸக்ஸஸ், (சியூயார்க்) நவ 4

ரஷியாவின் 5 அம்சத் திட்டத்தைப்பற்றி மேலும் விரிவாக தெரிவிக்கமுடியும் ? என்ற கேள்வியை பிரிட்டிஷ் பிரதிநிதி ஐ நா சபையின் பாலஸ்தீன பிரிவினை உப கமிட்டிக் கூட்டத்தில் இன்று கேட்டார்

இந்த 5 அம்சத் திட்டப் பிரகாரம் ஜனுவரி முதலாம் தேதியோடு தனது அதிகாரத்தை விட்டுத் தொலைக்கவும், அதன் பின் மூன்று நான்கு மாதங்களில் தனது படைகளை வாபஸ் பெறவும் பிரிட்டன் முன்வர வேண்டும். பாதுகாப்பு சபைக் கமிஷனின் மேற்பார்வையின் கீழ் இடைக்கால அராபிய யூத அரசாங்கங்கள் நிறுவப்பட்டு அதற்கடுத்தபடியாக அரசியல் நிர்ணய சபை இரண்டு தெரிவப்படவேண்டும் இதுதெரிவு இடைக்கால சர்க்கார் ஆரம்பித்து 6 மாத காலதுக்குள் நடக்கவேண்டும்.

சோவியத் பிரதிநிதி இது சம்பந்தமாக விரிவாகப் பேசதாம் இன்னும் தயாராகவில்லை என்று மறததுவிட்டார்.

பிரஸ்தாப உப கமிட்டி அடுத்ததடவை கூடும்போது பாலஸதீன் சம்பந்தமாக நிறுவப்பட்ட அராபிய உப கமிட்டி தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்று தெரிகிறது.

(ராய்ட்டர்)

எல்லோரும் இலங்கையர்

யாழ்ப்பாணம், நவ 4

யாழ்ப்பாண நகரசபை அங்கத்தவர்கள் திரு. பண்டாரநாயக்காவுக்கு ஒரு விருந்தளித்தார்கள்.

அவ்விருந்துபசாரத்தில் நகரசபை அங்கததவர் திரு சாம்ராஜ் சபாபதி பேசியபோது சிங்களவர், தமிழர், பறங்கியர், சானகர் ஆகிய இந்நாட்டிலுள்ளவதியும் சமல சாதியினரும் இலங்கை மக்கள் எனக் குறிப்பிட்டார்.

டாக்டர்கள் துரைராஜா நந்தையா ஆகியோரும் பேசினர் திரு. பண்டார நாயக்கா நன்றி கூறினர்.

தீ இடைவெளி அபிவிருத்திக்கு ஒரு சபை

கொழும்பு, நவ 5

கொழும்பிலுள்ள தீ இடைவெளிகளை எடுத்து அபிவிருத்தி செய்வதற்கு தீ இடை அபிவிருத்திச் சட்டப்படி ஒரு சபையை கவர்னர் சமீபத்தில் அமைபாரென்று அறியப்படுகிறது இதற்காக ஒன்பது பேர்கள் காண்ட ஒரு சபை அமைக்கப்படும். அதில் பொக்கிஷ இலாகா அதிகாரி ஒருவர், சொலிசிட்டர் ஜெனரல், ஸ்தலஸ்தாபன சர்க்கார் கமிஷனர், மற்றும் ஆறு அங்கததவர்களும் இருபர்.

கொழும்பு, நவ 5

வியாபாரகொடையில் சென்ட மேரி தேவாலயத்தில் காலஞ்சென்ற ஸர் சுலமன் பண்டாரநாயக்காவுடைய ஞாபகார்த்த சின்னமொன்று அமைக்கப்படும். இதற்கான ஏற்பாடுகள் நடந்து வருவதாக அறியப்படுகிறது.

சர்வ கலாசாலை மாணவ மாணவிகள் தேக நிலை

எல்லோரும் பரிசோதிக்கப்படுவர்

கொழும்பு, நவ 5

சர்வ கலாசாலை மாணவ மாணவிகள் தேக நிலைகளை பரிசோதிததுபார்தறக்கூடிய நோயுள்ளவர்களுக்கு உடனடியாக சிகிச்சைகளை அளிப்பதற்கு சர்வகலாசாலையில் ஆலோசிக்கப்பட்டுள்ளது சர்வ கலாசாலை உப அததியட்சகர் டாக்டர் ஐவர் ஜென்னிங்ஸ் வெளியிட்ட அறிக்கையொன்றில் சர்வ கலாசாலை மாணவ மாணவிகள் வருடத்தில் ஒரு முறை பாவது பரிசோதிக்கபபட வேண்டுமென்று தெரிவிததுள்ளார். முதல் பகுதியாக அடுத்த பெப்ரவரியில் மாணவ மாணவிகள் பரிசோதிககப்படுவர்.

சச்சரவிட்டதாக வழக்கு

சமரஸமாகப் போக கோர்ட்டில் தீர்ப்பு

கொழும்பு, நவ 5

மட்டக்குளியைச் சேர்ந்த திரு. எஸ் வி எம். சௌந்தரநாயகமும் அவரது மனைவியும் வேலைககாரச் சிறுமி மக்கி என்பவரும், பலாத்காரம் பிரயோகித்ததாகவும், ஏசியதாவும், அச்சுமூறிப் பிரவேசித்ததாகவும் அதே இடக்தைச் சேர்ந்த திரு ஜோன் பிரான்ஸிஸ கதிரான் என்பவரால் குற்றம் சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழகு கொழும்பு அடிஷனல் மஜிஸ்டிரேட் திரு பண்டித குணவர்தனு முன் விசாரணைக்கு எடுக்குக் கொள்ளப்பட்டது. எதிரிகள் தாங்கள் இனி மேல் வழக்காளியின் விஷயததில் தலையிடுவதில்லையென்று கோர்ட்டில் தெரிவித்த பின்னர் நீதிபதி அவர்களை விடுதலை செய்தார்.

மனிதனை விழுங்க பலைப்பாம்பின் முயற்சி

வெலஸ முல்ல நவ 5

ஜாலம் பிட்டியாவைச் சேர்ந்த பஹாலா-ஓடட வாசியான ஓ ஏ எட்வின் என்பவர் தமமை விழுங்க முயற்சித்த மலைப்பாம்பின் பிடியிலின்றும் தாம் தபபிய விதத்தைப்பற்றி வெல ஸ்முல்ல போலிஸ கான்ஸ்டபிள் ஒருவரிடம் தெரிவித்தார்.

ஒரு நீரோடையைக் கடந்து செல்ல முயற்சிக்கையில் ஒரு மலைப் பாம்பின் மீது தடுமாறி விழுந்ததாகவும் அம்மலைப் பாமபு சடுதியில் தமது காலைச் சுற்றி பிடித்துக்கொண்டதாகவும் அதன் வால்பகுதி மேலேயிருந்ததால் தாம் அதன் வாலை பிடித்துக்கொண்டு சததமிட்டதாகவும் மலைப்பாம்பு தமது காலைக் கௌவிப் பிடித்துக் கொண்டதாகவும் கூறினர். சததததைக் கேட்டு பக்கத்திலுள்ள சேனையில் வேலைசெய்துகொண்டிருந்த இவரின் தகப்பனார் உடனே வந்து மலைப்பாம்பைக் கததியால் வெட்டித் தம்மைக் காப்பாற்றினர் என்றும் கூறினர்.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டேட்டிற்காக, 1947-ம் ஞு நவம்பர் மீ 6 இந்த பத்திரிகை 144A, கட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org